விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 22 திங்கட்கிழமை (08.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தேர்தலில் சிறுபான்மையினரை

# இடறுகிறது பொது எதிரணி!

(கொழும்பு) இலங்கையில் ஆட்சி பீடம் ஏறும் சிங்களவர்கள் எவரும் சிறுபான்மையினருக்கு எதையும் வழங்கத் தயார் இல்லை என்பதை தேர்தலுக்கு முன்பே வெளிப்படுத்திவரும் பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் அண்மைக்கால அறிக்கையினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி என்பன கடும் அதிர்ச்சியடைந்துள்ளதாக அறியமுடிகின்றது.

24 ஆம் பக்கம் பார்க்க....



ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்ட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்கின் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொரளை - கொட்டா வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்தே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

## வடக்கில் வனலாகா பிரிவினர் காணிகளைச் சுவீகரிக்க முயற்சி

(கிளிநொச்சி)

வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வனலாகா பிரிவினர் தமக்குச் சொந்தமான நிலங்கள் என அடையாளப்படுத்தி பொதுமக்களுடைய நிலத்தை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக தெரிய வருகின்றது.

வடக்கில் போர் நிறைவடைந்ததன் பின்னர் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருமளவு நிலம் சிங்கள குடியேற்றங்களுக்காகவும், பொதுத்தேவை என அடையாளப்படுத்தப்பட்டு படையினர் மற்றும் கடற்படை, விமானப்படையினரின் தேவைகளுக்காகவும் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு சுவீகரிக்கப்படுவதற்காக தொடர்ந்தும் முயற்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் 3-வது முயற்சியாக வனலாகா பிரிவினர் தமக்குச் சொந்தமானவை

24 ஆம் பக்கம் பார்க்க....

## 5 எம்.பிக்கள் கட்சி தாவுவர் !

(கொழும்பு)

இந்த வாரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மேலும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது ஆதரவை வெளியிடுவர் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது

இதில் சில அமைச்சர்களும் அடங்குகின்றனர். இவர்கள் அரசாங்கத் தில் இருந்து விலகி தமது ஆதரவை மைத்திரிபாலவுக்கு வழங்கவுள்ளனர்.

இதற்கிடையில் மற்றும் ஒரு அரசாங்கத் தரப்பினர் மைத்திரிபால சிறிசேன

24 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை திருப்பதி வர அனுமதிக்கக் கூடாது — ராமதாஸ்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை திருப்பதி வருவதற்கு மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர், வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் இலட்சக்கணக்கான அப்பாவித் 



தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படு

24 ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியின் தேர்தல் ஊர்வலத்தில் மகிந்த வழங்கிய மோ.சைக்கிள் !



(கொழும்பு)

அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு மகிந்த ராஜபக்சவின் சலுகைகள் அறிவிக்கப்பட்டாலும் அவர்களில் பலர் எதிர்க்கட்சி பொதுவேட்பாளருக்கு வெளிப்படையாகவே ஆதரவை வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கையில் தற்போது ஜனாதிபதி தேர்தலை குறி வைத்து அரச ஊழியர்களுக்கு

24 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் மக்கள் காணிகளை இராணுவம் கையகப்படுத்தவில்லை

### கூறுகிறார் ருவான் வணிகசூரிய

(கொழும்பு)

வடக்கில் பொதுமக்களின் காணிகளையோ அல்லது பொதுத்தேவைகளுக்குரிய காணிகளையோ இராணுவம் உள்ளிட்ட படைப்பிரிவினர் கையகப்படுத்தவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய புதுவிளக்கமளித்துள்ளார்.

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முஸ்லிம் கிராமமாகிய ஆண்டியாபுளியங்குளம் கிராமத்தில் பொதுத் தேவைக்குரிய காணிக்காக போராட்டம் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

பொதுத் தேவைக்கென ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்த 12 ஏக்கர் காணியைத் துப்புரவு செய்தபோது அந்தக் காணி தமக்கே சொந்தமானது என உரிமை கோரி, இராணுவத்தினர் தடை செய்திருந்ததையடுத்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றிருக்கின்றது.

பொது விளையாட்டு மைதானம் ஒன்றும், ஆரம்ப பாடசாலை ஒன்றும் இங்கு அமைப்பதற்கென அகில இலங்கை காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமாகிய ரிசாட் பதியுதீன் நிதியொதுக்கீடு செய்திருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

நேற்று முன்

24 ஆம் பக்கம் பார்க்க....

## வேட்பு மனுவில் கைச்சாத்திட்டார் மைத்திரி

(கொழும்பு)

பொது எதிர் அணியின் ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தன்னுடைய வேடபு மனுவில் நேற்றிரவு 10.30 மணியளவில் கையொப்பமிட்டுள்ளார் என்று

24 ஆம் பக்கம் பார்க்க....

## பூநகரி விபத்தில் இளைஞன் சாவு!

(கிளிநொச்சி)

பூநகரி - பரந்தன்வீதியில்நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் தென்னிலங்கையை சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் இந்திக சில்வா (வயது 19) என்பவரே மரணமானவராவார். வீதியில் நின்றவரை வாகனம் ஒன்று மோதிவிட்டுத் தப்

24 ஆம் பக்கம் பார்க்க....

## பணத்திற்காக பிணத்திற்கு மருத்துவர்கள் மருத்துவம்

(ஆந்திரா)

ஆந்திராவில் பிணத்துக்கு மருத்துவர்கள் மருத்துவம் பார்த்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரகாசம் மாவட்டம் பாப்பாயி பாளையத்தை சேர்ந்தவர் நாகராஜ் (30). கடன் தொல்லை காரணமாக இவர் விஷம் குடித்தார்.

இதனையடுத்து ஆபத்தான நிலையில் அவரை உறவினர்கள் சீராளாவில்

24 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி விற்பனைக்கு

இல.65, D10 உருத்திரபுரத்தில் உள்ள மேட்டுக்காணி 3ஏக்கர், வயல் காணி 4 ஏக்கர். சகோதரர்களான தேவராசா – ராசம்மா, அருமைநாயகம் –கனகம்மா ஆகியோரின் பெயர்களில் தலா 2, 11/2 ஏக்கர் பிரிக்கப்பட்டு உறுதி உள்ளதும் இரணைமடு நீர்ப்பாசனத்தின் கீழ் இருபோக பயிர்ச்செய்கையை மேற்கொள் எக்கூடியதுமான காணிகள் முழுமையாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
P. பாலசிங்கம்
371, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-9306)


# தமிழரின் தேசிய அபிலாசையை ஆக்கிரமிப்பால் சிதைக்க முடியாது

## சிறிதரன் எம்.பி உரிமை உரை

அதிகார வர்க்கத்தால் தமிழர்களுக்கான தேசிய அபிலாசைகளை அதிகார மமதையால அழித்துவிட முடியாது. தேசிய இனமான தமிழர்கள் அதற்காக பல தியாகங்களைப் புரிந்திருக்கிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

2014இன் தனது வரவு செலவுத்திட்ட நிதியினூடாக மிருசுவில் நேயம் சமூக நிலையத்துக்கு அறிவியல் நூல்களை வழங்கும் நிகழ்வு நேற்று பி.ப 3.00 மணியளவில் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய சி.சிறிதரன் (பா.உ),

தமிழர்கள் தங்களுக்கே உரித்தான இறைமையின் அடிப்படையிலான சுயவாழ்வு பற்றி மிக பக்குவமாக சிந்தித்து வருகின்றார்கள்.

இழந்துபோன தங்களுடைய தேசத்தின் இறைமைபற்றி அவர்கள் கொண்டிருக்கும் எண்ணமானது நிராகரிக்கப்பட முடியாதது.

ஏனெனில் வடக்கு கிழக்கில் தமிழர்கள் தங்களுக்கு வரலாற்று ரீதியான நிலப்பரப்பையும் பரம்பரை அடிப்படையிலான கலாசார பண்பாடுகளையும் உலகச் செம்மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியின் உரித்தையும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான தத்துவ அடிப்படையையும் அவர்கள் கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் பரம்பரை இழப்பின் சாம்பல் மேடுகளிலிருந்து தமக்கேயுரித்தான உரிமை பற்றி பேசுவதற்கு உரிமையுடையவர்கள். இதையாரும் ஆக்கிரமிப்பை பிரயோகித்து அழித்து விடமுடியாது என்றார். (செ-11)


# கண்ணீர் அஞ்சலி



## கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல் J.P

எமது நிறுவனத்தின் முன்னாள் முகாமையாளரும் பிரபல சமூக சேவையாளருமாகிய கி.தங்கவடிவேல் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

695, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

பணிப்பாளரும்,
ஊழியர்களும்
மெடி எயிட்ஸ் நிறுவனம்.

(சி-9303)

# கண்ணீர் அஞ்சலி

## கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல் J.P

(வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச மத்தியஸ்தசபை உறுப்பினர்)



அன்னார் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர்க்கு, எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள்
கோப்பாய் பிரதேச மத்தியஸ்தசபை.

(8581)

யாழ் பல்கலைக்கழக சமுதாய, பிராந்திய திட்டமிடல் கற்கை நெறியின் இளம் திட்டமிடல்லாளர்கள் சங்கம் நடாத்தும்

# உலக நகரத்திட்டமிடல் தினம்

## World Town Planning Day

காலம் - 12 மார்கழி 2014 காலை 9.00 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கு

நிகழ்வின் தலைவர் **P நிரோஜன்**
தலைவர்,
இளம் திட்டமிடலாளர் சங்கம்

**பிரதம விருந்தினர்**
**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**
துணைவேந்தர்,
யாழ் பல்கலைக்கழகம்

**கௌரவ விருந்தினர்**
**YAGK குணதிலக**
நகர திட்டமிடலாளர்,
பணிப்பாளர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை
வட மாகாணம், யாழ்ப்பாணம்

**சிறப்பு விருந்தினர்கள்**
**பேராசிரியர் வி. பி. சிவநாதன்**
பீடாதிபதி, கலைப்பீடம்

**திரு. சு. அருமைநாயகம்**
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.

**நிகழ்வின் செயலாளர்**
**செல்வி L. யாசோதா**
செயலாளர், இளம் திட்டமிடலாளர் சங்கம்

**விடயம் சார்ந்த கருத்துரைகள்**

**நாளைய யாழ்ப்பாண நகரம் ~ சவால்கள் ~**
**YAGK குணதிலக**
நகர திட்டமிடல்லாளர்,
பணிப்பாளர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை
வட மாகாணம்

**அனர்த்த மீட்சித்திறனுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தை உருவாக்குதல்**
**திரு. ச. ரவி, உதவி பணிப்பாளர்,**
அனர்த்த முகாமைத்துவ பிரிவு,
யாழ்மாவட்டம்

**நிலைத்து நிற்கக்கூடிய எதிர்கால நகரங்களைத் திட்டமிடுதல்**
**திரு செ. இரவீந்திரன்**
நகர திட்டமிடலாளர்
சிரேஸ்ட விரிவுரையாளர்
யாழ்பல்கலைக்கழகம்

இளம் திட்டமிடலாளர் சங்கம்
சமுதாய, பிராந்திய திட்டமிடல்
புவியியற்றுறை, யாழ்பல்கலைக்கழகம்

உலக நகரத்திட்டமிடல் தினத்தை முன்னிட்டு
யாழ் பல்கலைக்கழக சமுதாய, பிராந்திய திட்டமிடல் கற்கை நெறியின் இளம் திட்டமிடலாளர்கள் சங்கம் நடாத்தும்

# நகரத்திட்டமிடல் கண்காட்சி

## Town Planning Exhibition

காலம்: மார்கழி 11 - 12 ம் திகதி 2014
இடம்: கீழ் தளம், கலைப்பீட கட்டிடம்
யாழ் பல்கலைக்கழகம்

### கண்காட்சி மாதிரிகள்

சிங்கப்பூர் மரீனா குடா
கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை
கிரோசிமா மீதான அணுகுண்டு அனர்த்தமும் மீள்கட்டுமானமும்
குடாநாட்டு நீர்வள அபிவிருத்திக்கான ஆறுமுகம் திட்டம்
அம்பாந்தோட்டை துறைமுகம்
கொழும்பு துறைமுகம் தெற்கு விரிவாக்கற் திட்டம்
இரணைமடு யாழ்ப்பாணம் நீர் விநியோகத்திட்டம்
காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமானத்தள அபிவிருத்தித்திட்டம்
நியூயோர்க நகரம், நியூயோர்க் மத்திய பூங்கா
பிஸான் பூங்கா சிங்கப்பூர், விகாரமா தேவி பூங்கா, கொழும்பு
உயரம் குறைவான, உயரமனமாடிக் குடியிருப்புக்கள்,
மகாவலி அபிவிருத்தித் திட்டம்
உட்கட்டமைப்பு விநியோக சுரங்கப்பாதை
காலிமுகத்திடல், தியவன்ன வாவி பொழுதுபோக்கு மையம்
பெருந்தோட்டக் குடியிருப்புக்கள்
புராதன நாகரீககால இடம்சார் திட்டமிடல்
நகராக்கமும் நகரப் பிரச்சினைகளும், சேரிக்குடியிருப்புக்கள்
அதிவேக நெடுஞ்சாலை இடமாறல்
யாழ்ப்பாண நகர அபிவிருத்தி மாதிரிகள்
இன்னும் பல காட்சி மாதிரிகள்......................

(சி-9307)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றிய தடையை நீக்க அமுனுகம விரைவு

இலங்கையில் இருந்து மீன்களை இறக்குமதிசெய்வதை தடை செய்யப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், அதுகுறித்துப் பேச்சு நடத்துவதற்காக அமைச்சர் சரத் அமுனுகம பிரசெல்ஸ் செல்லவுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வழிகாட்டுதல்களின்படிஇலங்கையில் மீன்பிடி முறைகள் இடம் பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, இலங்கையில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதை தடை செய்யப் போவதாக ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு கடந்த ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் எச்சரித்திருந்தது.

அத்துடன், மீன்பிடி முறைகள் தொடர்பிலான தமது நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினால், எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் இருந்து இலங்கையில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்படும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு அமைச்சர் சரத் அமுனுகமவை அரசாங்கம் எதிர் வரும் புதன்கிழமை பிரசெல்சுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் மிகப்பெரிய மீன் ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் விளங்குகிறது.

2013ஆம் ஆண்டில் 94 மில்லியன் டொலர் பெறுமதியான மீன்களை இலங்கையில் இருந்து ஐரோப்பிய ஒன்றியம் இறக்குமதிசெய்திருந்தது.

இலங்கையில் இருந்து மீன்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தால், அது பொருளாதார ரீதியாக இலங்கை க்கு பெரும் பாதி ப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)


மூக்குக் கண்ணாடி

40 வருட கால சேவையில் உங்கள் முக அமைப்புக்கேற்ற மூக்குக்கண்ணாடிகளை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம் மொறாயஸ், 50, மணிக்கூட்டு வீதி, பழைய வெலிங்டன் திரையரங்கு முன்பாக யாழ்ப்பாணம். (சி-9302)

தொலைபேசி இல:- 021 221 7514


# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

அகவை அறுபதை அடுத்து உவகை பெற ஓய்வு காணும்
நீர்வேலி உப தபாலக தபால் உத்தியோகத்தர்

## திரு. பெரியதம்பி அமிர்தலிங்கம்



வண்ணக் கதைகள் சொல்லி வளங்கள் எம்மில் காணும்
சின்னத் தாத்தாவுக் கின்று சிறப்பகவை அறுபது மாச்சு
உன்னும் எம் நினைவுகளில் உருப்பெறும் அவர் நினைப்பால்
வண்ணத் தமிழில் நின்று நாம் வாழ்த்துரைக்க வாய்ப்புமாச்சு
வாய்ப்புகளை வசமாக்கி வலு நிலைகள் காணவென- நம்
தாய்க்கான வழியில் நின்றே தகைமை பெற்ற சின்னத் தாத்தாவே!
வாய்க்கால் தரவையாரம் வழிபாட்டுப் பிள்ளையாரின்
வாய்ப்பாய் அருள் சேர்ந்து வளமாக வாழ்ந்திடுவீர்!
உருவாலும் உளத்தாலும் உயர்வுதனைக் காட்டி யென்றும்
திரு நிறையும் திருவதனம் தித்திப்பாய் நிதம் சிரித்து நிற்கும்
புருவங்கள் நெளித்து நல்ல புதுக்கதைகள் புகலும் சின்னத்தாத்தாவே!
இருந்திடும் காலமெல்லாம் இனிதாக அமைந்திட
இதயத்தால் வாழ்த்துகின்றோம்.

கேணியடி வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(8575)

பாசமிகு பேரப்பிள்ளைகள்,
அக்சனா, அபிஷாத், அபிஷன்.

# இராசி பலன்

08.12.2014
(கார்த்திகை 22, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு,
துதியை முன்னி-ரவு 7.06 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 2.33 மணிவரை
இராகுகாலம் 7.47-9.17 மணிவரை
சுபநேரம் 12.17-01.47 மணிவரை
நான்காம் கார்த்திகை சோமவாரம்
சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்** – விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**இடபம்** – நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், வாய்ப்புக்கள் வந்து சேரலாம், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**மிதுனம்** – குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், காணாமற்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்கள் ஏற்படலாம்.

**கடகம்** – எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தொழில்நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள்.

**சிம்மம்** – பொன்னான நாள், பயணங்கள் எண்ணியபடியே கைகூடும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** – செல்வாக்கு மெலோங்கும் நாள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர்.

**துலாம்** – கனிவான பேச்சுக்களால் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** – கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கும், சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புகளை அடையலாம்.

**தனுசு** – குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், உறவினர் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்** – சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உடல்நலன் சீராகும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கும்பம்** – வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** – எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொலைதூரத் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகள் புத்தாக்கம் பற்றி பேசுவதில்லை கடன் வழங்குவது பற்றியே பேசுகின்றன

## –மத்திய வங்கி ஆளுநர்

வங்கித்துறையில் போட்டிகளைச் சமாளிப்பதற்கு, வளர்ச்சி நோக்கியும் வங்கிகள் புதிதாக உற்பத்திகளையும் சேவைகளையும் ஆரம்பித்தல் வேண்டும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் கப்ரால் ஆலோசனை வழங்கியுள்ளார்.

“வெளிநாடுகளின் பல வங்கிகள் புதிதான வங்கி உற்பத்திகள், சேவைகள் பலவற்றைப் பற்றி எம்முடன் பேசியுள்ளன. ஆயினும் ஒரு உள்நாட்டு வங்கி எம்முடன் இந்த வகை புத்தாக்க முயற்சிகள் பற்றி பேசுவது கிடையாது. கடன்கள் வழங்குவது பற்றியே அவைகள் எம்முடன் பேசுகின்றன என்று அஜித் நிவாட் கப்ரால் தெரிவிக்கிறார்.

இலங்கை மத்திய வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணிப்பாளர் ஆய்வரங்கு 2014 நிகழ்வு புதன்கிழமையன்று (26/11) கொழும்பில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய கப்ரால் தெரிவிக்கையில், கடந்த சில வருடங்களில் தனியார் துறையினரின் கடன் வளர்ச்சி தாழ்ந்து செல்லும் போக்கில் காணப்பட்டது. இவ்வாண்டின் இரண்டாம் அரையாண்டு பகுதியிலேயே சிறிதளவு முன்னேற்றம் தென்பட்டுள்ளது. வர்த்தக வங்கிகளிடமிருந்து தனியார் துறையினர் பெற்ற கடகள் செப்டெம்பர் மாதத்தில் 52.3 பில்லியன் ரூபாய்களாக இருந்தது.

கடன்வழங்குதலினால் மட்டும் வர்த்தகம் ஊக்குவிக்ககப்படுவதில்லை. புதுவகை உற்பத்திகள் சேவைகளை தேடி அறிமுகம் செய்தல் அவசியமானது. 2020ஆம் ஆண்டில் 150 பில்லியன் டொலர்கள் பொருளாதாரத்தையும், தனியாள் வருமானமாக 7,000 டொலர்களை வழங்கும் நிலையையும் ஏற்படுத்தும் திசையில் தாம் இட்டுநிரப்ப வேண்டிய வகிபாகம் பற்றி வங்கிகள் கவனத்தில் கொள்ளுதல் அவசியம் எனக் கப்ரால் தெரிவித்தார்.

நீங்கள் இலட்சியக் கனவுகளை கொண்டிருப்பது சாதனையாகாது. அவற்றை நடைமுறையில் செயற்படுத்துவதற்கு தயாராகுதல் அவசியம் 2020-ம் ஆண்டளவில் வங்கித்துறை 18 ட்ரில்லியன் டொலர்கள் பெறுமானத்துடன் இயங்குவது குறியிலக்காகும் எனவும் கப்ரால் தெரிவித்தார்.

# வெளிநாட்டு வங்கிகளின் பங்களிப்பு அதிகரிக்கும்!

## –மத்திய வங்கி

இலங்கையில் காணப்படும் வெளிநாட்டு வங்கிகள் நாட்டின் பொருளாதார செயற்பாடுகளில் பெருமளவு பங்களிப்பை வழங்க தயாராக உள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதற்கமைவாக, வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் தமது வெளிநாட்டு வங்கிகளின் வலையமைப்பு இடையீட்டாளர்களாகவும் நிதி மற்றும் நிபுணத்துவத்தை நாட்டின் வெவ்வேறு துறைகளுக்கும் வழங்க முன்வந்துள்ளன.

வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதிகள், மத்திய வங்கியின் ஆளுநருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த பங்களிப்புக்கான தமது உறுதிமொழியை குறித்த வெளிநாட்டு வங்கியினர் வழங்கியிருந்தனர். 12 வெளிநாட்டு வங்கிகளும் இரு முன்னணி வங்கிகளும் நிறைவடைந்த நிதியாண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மேம்படுத்தப்பட்ட கடன் நிதி வழங்கலை மேற்கொண்டிருந்தன.

குறிப்பாக எச்எஸ்பிசி வங்கியின் நிதி வழங்கல் 20.5 வீதத்தால் அதிகரித்து 155.56 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. ஸ்டான்டர்டட் சார்ட்டட் வங்கியின் நிதி வழங்கல் 12 வீதத்தால் அதிகரித்து 55.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.

தற்போது நிலவும் குறைந்த வட்டி வீதங்களின் காரணமாக ஓகஸ்ட் மாத இறுதியில் வங்கிகளின் மொத்த கடன் வழங்கல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 வீதத்தால் அதிகரித்து 3.50 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.




# 2014-ம் ஆண்டின் மிகச் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவு

தற்போதைய நிதி ஆண்டு அதன் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் கொமர்ஷல் வங்கி இன்னும் ஒரு மைல்கல்லை எட்டியுள்ளது. ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்டு செயற்படும் கீர்த்திகிகு ‘த பேங்கர் சஞ்சிகை’ இலங்கையில் ‘வருடத்திள் வங்கியாக’ கொமர்ஷல் வங்கியைத் தெரிவு செய்துள்ளது. தீர்மானிக்கப்படுகின்றது.

லண்டன் நகர் பார்க் லேனில் உள்ள இன்டர் கொன்டினன்டல் ஹோட்டலில் நவம்பர் 27ம் திகதி இவ் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. கடந்த 3 மாத காலப் பகுதியில் கொமர்ஷல் வங்கி வென்றுள்ள 2-வது மிகப்பெரிய சர்வதேச வங்கித்துறை விருது இதுவாகும். கடந்த செப்டம்ப ரில் ஏசியன் பேங்கர் சஞ்சிகை இலங்கையில் 2014-ல் மிகவும் உறுதியான வங்கி என்ற விருதை வழங்கியது.




உலகின்தலை சிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர ந்து 4 ஆண்டுகளாக இடம்பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கி கொமர்ஷல் வங்கியே.

த பேங்கர் சஞ்சிகை ஒன்பதாவது தடவையாக இந்த விருதை கொமர்ஷல் வங்கிக்கு வழங்கியுள்ளது. வருடாந்தம் உலகளாவிய ரீதியில் ஆயிரம் தலைசிறந்த வங்கிகளை பட்டியலிடும் பணியையும் இந்த சஞ்சிகையே மேற்கொண்டு வருகின்றது.

வருடத்திள் வங்கி என்ற இந்த விருது சர்வதேச ரீதியாக வங்கித் துறையில் ஒரு ஒஸ்கார் விருதாகக் கருதப்படுகின்றது. பல்வேறு குறிகாட்டிகளின் அடிப்படையிலான செயற்பாட்டை மையமாக வைத்தே இந்த விருது

1926-ல் த பேங்கர் சஞ்சிகையை நிறுவிவரும் அதன் ஸ்தாபக ஆசிரியரும் மற்றும் 1945 முதல் 1958 வரை பினான்ஸியல் டைம்ஸ் சஞ்சிகையின் தலைவராகவும் இருந்த பிரண்டன் பிரக்கனின் நினைவாக வருடத்திற்கான வங்கி விருது வழங்கப்படுகின்றது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன் துரைரட்ணம் இவ் விழாவில் கொமர்ஷல் வங்கிக்கான விருதைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பங்குச் சந்தை விபரம்

## (வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,153.90 | 7,238.92 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,971.12 | 4061.56 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,206.534 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** லங்கா சீமெண்ட்(8.80),பிசி ஹவுஸ்(0.30), சிரஸ் லிசர்(1.70),த பினான்ஸ் கோ.(22.30),முல்லர்ஸ்(1.70).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** செலின்சிங்(1432.00),ஹனஸ் போல்ஸ்(59.00), ரேடியன்ட் ஜெம்ஸ்(48.60),குட் ஹேறாப்(1799.00),பி.எல்.லங்கா பினான்ஸ்(9.20).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# SLIIT கல்வியகத்துக்கு உதவும் ஐரோப்பிய ஒன்றியத் திட்டங்கள்

இலங்கையின் முன்னணி தகவல் தொழில்நுட்ப உயர் கல்வியை ι ο q SLIIT உடன் ஐரோப்பிய ஒன்றியம் கைகோர்த்துள்ளதுடன், இதன்மூலம் 2014/2015 காலப்பகுதிக்கான Erasmus Mundus Action II திட்டமான South-East-West Mobility for Advanced Research, Learning, Innovation Network and Knowledge (SMART LINK) உடன் இணைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவிகளின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டமாக Erasmus Mundus அமைந்துள்ளது.

இந்த திட்டத்தினூடாக 19 இதர ஐரோப்பிய ஒன்றிய மற்றும் ஆசிய பல்கலைக்கழகங்களுடன் மாணவர்களுக்கு கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.




இந்த திட்டத்தின் மூலம் தற்போதைய பங்காண்மையை மேலும் உறுதி செய்யும் வகையில் அமைந்திருப்பதுடன், ஐரோப்பிய ஒன்றியம், தெற்காசிய நாடுகள் மற்றும் கிழக்கு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்கிடையில் சிறந்த பரஸ்பர பங்காண்மையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்த திட்டத்துக்கான கொடுபனவுக்கமைய SLIIT க்கு 9 நடமாடும் செயற்பாடுகள் தமது மாணவர்களுக்கும் இளம் ஆய்வாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தைச் சேர்ந்த 22 பங்காளர்களில் ஒன்றாக SLIIT ஐ ஐரோப்பிய ஒன்றியம் தெரிவு செய்துள்ளது. அரச சார்பற்ற ஒரே கல்வியகமாக இந்த பெருமைக்குரிய Erasmus Mundus Action II திட்டத்துக்காக SLIIT அமைந்துள்ளது.

SLIIT கல்வியகத்துக்கு பெருமளவு வெளிநாட்டு கல்வியகங்களுடன் ஆய்வு ரீதியான தொடர்பை ஏற்படுத்தும் வகையில், இந்த Erasmus திட்டம் அமைந்திருக்கும். மேலும் இந்த ஒன்பது நடமாடும் ஆய்வு செயற்பாடுகளுக்காக Erasmus க்கு 5000 யூரோக்கள் வழங்கப்படும்.

2004 இல் அறிமுகம் செய்யப்பட்ட Erasmus திட்டம் ஐரோப்பா மற்றும் ஆசியா ஆகிய நாடுகளுக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்தி பொருளாதார, கலாசார மற்றும் விஞ்ஞான ரீதியிலான பரிமாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

# SLIM விருதுகள்

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான பிளென்டி ஃபூட்ஸ்(பிரைவற்) லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி தானிய ஆகாரமான சமபோஷ, அண்மையில் இடம்பெற்ற SLIM வர்த்தக நாம சிறப்பு விருதுகள் வழங்கும் விழாவில் வருடத்திற் கான சிறந்த CSR வர்த்தக நாமம் பிரிவில் தங்க விருதினை தனதாக்கிக் கொண்டது.

இந்த விருதானது வர்த்தகநாம உத்தியின் ஒருங்கிணைந்த பகுதியாக சுற்றுச்சூழல் மற்றும் வர்த்தகத்திற்கு சிறப்பானவற்றை செய்து பேண்தகைமை நோக்கி சம போஷ மற்றும் பிளென்டி ஃபூட்ஸ் ஆகியவை வழங்கிய முன்னு தாரணமான பங்களிப்பை அடையாளபடுத்துவதாக அமைந்திருந்தது.

வருடத்திற்கான CSR வர்த்தக நாமம் பிரிவில் தங்க விருதினை வென்றமையும், பேண்தகைமை மற்றும் எமது ஒட்டுமொத்த கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு முயற்சிகள் தொடர்பான எமது ஈடுபாடு கௌரவிக்கப்பட்டமையும் பெருமைக்குரிய விடயமாகும் என பிளென்டி ஃபூட்ஸ்(பிரைவற்) லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பணிப்பாளருமான ஷெம்மி கருணாரத்ன தெரிவித்தார்.



# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

## (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.20 | 133.09 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.17 | 208.99 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.22 | 165.48 |
| சுவிஸ் பிராங் | 133.12 | 137.93 |
| கனேடிய டொலர் | 113.64 | 117.46 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.29 | 112.41 |
| சிங்கப்பூர் டொலர் | 98.64 | 101.85 |
| ஜப்பான் யென் | 1.08 | 1.11 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.67 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பல பிரச்சினைகளை மகிந்த அரசாங்கமே தீர்த்தது

## சந்திரகாந்தன் கூறுகிறார்

தமிழரின் பல பிரச்சினைகள் இந்த அரசாங்கத்தினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதேச அலுவலகம் சித்தாண்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப் பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கத்தினால் தமிழரின் பல பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டன. அத்துடன், தீர்க்கப்படாதுள்ள முக்கியமான பிரச்சினைகளும் இந்த அரசாங்கத்தினாலேயே தீர்த்துவைக்கப்படும். இந்தப் பிரச்சினைகளை வேறு எவராலும் தீர்த்து வைக்க முடியாது.

அதிகாரபகிர்வு என்ற விடயத்தில், 2008 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை நாம் மிகச் சிறந்த முறையில் செய்தோம். இதனை ஏற்படுத்தித் தந்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே.

அக்காலத்தில் 'கிழக்கின் நவோதயம்' போன்ற பல பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்திகள் அனைத்தும் இந்த அரசாங்கத்தினாலேயே சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறு சிறந்த ஆட்சி செய்து, மக்களை நிம்மதியாக வாழவைத்த இந்த ஆட்சியை எதற்காக மாற்றவேண்டும்?

புதிய ஒருவர் ஜனாதிபதியாக வந்தால், மாற்றங்கள் வருமென்று சிலர் நினைக் கலாம். எவ்வாறிருந்தாலும், தேசிய ரீதியில் சில மாற்றங்கள் ஏற்படுமே தவிர, சிறுபான்மையினருக்கு அதாவது, தமிழருக்கு எந்த மாற்றமும் வராது. எதிரணியில் கூட்டுச்சேர்ந்த ஒவ்வொருவ ரும், ஒவ்வொரு நிலைப்பாடு உடையவர் கள். இக்கூட்டுக்கட்சியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சுயமாக இயங்கமுடியாதவர்.

நாம் அனைவரும் சரியாகச் சிந்தித்து, இந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டும்' என மேலும் தெரிவித்தார்.(இ-5)

## அதாவுல்லாவின் ஆதரவு ஜனாதிபதி மகிந்தவுக்கு

ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழ ங்கப்படும் என தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா அறிவி த்துள்ளார். அமைச்சர் அதாவுல்லா உட்பட அந்த கட்சியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதியை சந்தித்து தமது ஆதரவினை தெரிவித்துள்ளனர். வடக்கு, கிழக்கை இரணடாக பிரிப்பது, நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து மீட்பது ஆகியன2005ஆம்ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி முன்வைத்த பிரதான கோரிக்கை எனவும் மூன்று வருடங்களில் ஜனாதிபதி தமது கோரிக்கையை நிறை வேற்றியதாகவும் தேசிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.உதுமா லெப்பை, மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.ஏ. அமீர் ஆகியோர் கலந்து கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-5)



முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 1931-02-08

இறப்பு 2013-11-19

அமரர் நா.கார்த்திகேசு

ஓராண்டு உங்களைப் பிரிந்து வாழ்ந்தாலும்
ஒரு நொடிப் பொழுதேனும் உங்கள் நினைவின்றி
வாழாமல் வாடுகின்றோம் ஆருயிரே...
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
பிரார்த்திக்கின்றோம்.

நிற்சாமம், சங்கானை. (8578)

இங்ஙனம் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அமரர் இம்மானுவேல் திரேசம்மா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் திரேசம்மா (05.12.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தமியாம்பிள்ளை இம்மானுவேலின் மனைவியும் , ராஜன், மனோகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெகநாதன், அன்ரன் விமலநாதன் (தொழில் நுட்பக் கல்லூரி, வவுனியா), இந்திரன் (பிரான்ஸ்), வதனி, குமுதினி (அருட்சகோதரி பிரான்சிஸ்கன் சபை) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். இவரது நல்லடக்கம் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

**21/2, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.** (8527)

**தகவல்:- குடும்பத்தினர்**


# விசேட சலுகை

**வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.**

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

**மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...**

**தொடர்புகளுக்கு:- 021 2217 603**
**021 5671 532**
**Valampuriijaffna@gmail.com**



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 32 சூரி, செவ்.<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:கனடா PR<br>தொ.இ: B/3590 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 32<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/2779 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 48.25 செவ்.12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BA ஆசிரியர்<br>தொ.இ: B/3591 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 12.25 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L /குடும்ப தாதி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/2783 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 25.5 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: B/3593 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 8<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA ஆசிரியர்<br>தொ.இ: G/2787 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 36<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3594 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 42 செவ் 1 இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:தனியார் தொழில்<br>தொ.இ: G/2788 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் புதிய பீடாதிபதியாக பேரா. மிகுந்தன் தெரிவு



யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்திற்கு புதிய பீடாதிபதியாக பேராசிரியர் குணசிங்கம் மிகுந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் பணிபுரிந்த பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் அவர்களது பதவிளக்காலம் முடிவடைந்த நிலையில் இவ்வருடத் தின் டிசெம்பர் மாதத்திலிருந்து அடுத்த மூன்றாண்டுகளுக்கு பீடாதிபதியாக பேராசிரியர் கு.மிகுந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கரவெட் டியிலுள்ள யாழ். மாணிக்கவாசகர் வித்தியாலயம் மற்றும் யாழ். ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனான இவர் தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூர் வேணாண் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியை கற்றவராவர். விவசாய பீட பேராசிரியரான பேராசிரியர் மிகுந்தன் விவசாய பீட பீடாதிபதியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# பேஸ்புக்கில் அவதூறு ஏற்படுத்திய இருவருக்கு 19ம் திகதிவரை மறியல்

(யாழ்ப்பாணம்)

முகப்புத்தகத்தில் (பேஸ்புக்) ஆபாச புகைப்படங்களை பதிவேற்றம் செய்து, இரு பெண்களுக்கு அவதூறு ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில், குடும்பஸ்தர் ஒருவரையும் இளைஞர் ஒருவரையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

கரவெட்டி கிழக்கு பகுதியைச் சேர்ந்த யுவதியொருவரை, வரணியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் தன்னை காதலிக்கும்படி முகப்புத்தகத்தினூடாக வற்புறுத்தி வந்துள்ளார்.

குறித்த யுவதி அதற்கு மறுப்பு தெரிவிக்கவே, அவ்விளைஞனின் முகப்புத்தக சுவற்றில் பதிவேற்றியிருந்த ஆபாச புகைப்படங்களை யுவதியின் பேஸ்புக் கணக்கில் இணைத்துள்ளார்.


தனது குடும்பத்தினருடன் முகப் புத்தகத்தை பார்த்த போது, தனது சுவற்றில் இணைக்கப்பட்டிருந்த ஆபாச படங்களால் அசௌகரியத்துக்கு உள்ளான அந்த யுவதி, இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ நிலையத்தில் கடந்த வெள்ளிக் கிழமை முறைப்பாட்டினை பதிவு செய்தார். யுவதியின் முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி இளைஞன் நேற்று முன்தினம் சனிக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அல்வாய், மனோகரா பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர், தனது மனைவியின் தங்கையின் முகத்தை, ஆபாச படங்களுடன் இணைத்து பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் நேற்று முன்தினம் சனிக்கிழமை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் 31 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர், தனது திருமணத்தை குழப்பும் நடவடிக்கையில் பல காலமாக ஈடுபட்டு வருவதாக பாதிக்கப்பட்ட பெண் தனது முறைப்பாட்டில் கூறியிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றபதில் நீதிவான் குமாரசாமி முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டுள்ளார். (இ-60)




# வியாபார உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்ட அனுசரணையுடன் தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்திற்கும் அன்னை கடலுணவு (எஸ்.கே.எம்.ஈ) இடையிலான வியாபார உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்திற்கு பதற்கான வியாபார உடன்படிக்கையானது ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் கடந்த 5ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந் நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதி உதவியில் அமைக்கப்பட்டு வரும் நண்டு பதனிடல் தொழிற்சாலையின் சந்தை வாய்ப்புக்களை விஸ்தரிப் தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்க நிர்வாகத்தினர் கலந்து கொண்டனர். இத் திட்டத்திற்கான அனுசரணயை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (யு. என்.டி.பி) வழங்கி வருகின்றமை யுடன் இத் திட்டத்தின் ஊடாக என் பதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவ துடன் ஊர்காவத்துறைப் பிரதேசத்தின் கடற்றொழிலாளர் உச்ச வருமானத்தினைப் பெற்றுக் கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது தம்பாட்டி கிராமத்தில் அமைக்கப் பட்டு வரும் இத்தொழி ற்சாலையா னதுஎதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிரு ந்து செயற்பட ஆரம்பிக்கம் என மேற்படி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# கால்நடைகளின் கடத்தலைக் கட்டுப்படுத்த கால்நடை அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் இருந்து நல்லினப் பசுக்கள் களவாடப்பட்டு வேறு மாவடங்களுக்குக் கடத்தப்படுகின்ற சம்பவங்கள் அதிகரிப்பதால் அதனைத் தடுப்பதற்குப் பதிவு செய்யப்பட்ட முகவர்களிடம் இருந்து மாத்திரமே இனிமேல் அரசசார்பற்ற நிறுவனங்கள் மாடுகளைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

கால்நடைகளின் களவுகளையும், கடத்தல்களையும் தடுப்பது தொடர்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை கால்நடைத் திணைக்கள அதிகாரிகளுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் அவரது அலுவலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பசுக்களைக் களவு கொடுத்ததாகப் பொதுமக்கள் பலர் தங்கள் குழந்தைகளைப் பறிகொடுத்தது போன்ற உணர்வுடன் எங்களிடம் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளார்கள். இதனால், கால்நடைகள் களவுபோவதையும் கடத்தப்படுவதையும் தடுக்கும் நோக்கிலேயே பசுமாடுகளை வாழ்வாதாரமாக வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்துக் கலந்துரையாடினோம்.

போர்க்காலத்திலும், போருக்குப் பின்னரான கடந்த ஐந்து வருடங்களிலும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆற்றிய பணி மகத்தானது. அதேசமயம், அரசசார்பற்ற நிறுவனங்களால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இதுவரையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட போதும் எதிர்பார்த்த அளவுக்கு பால் உற்பத்தி அதிகரிப்போ அல்லது கால்நடை அபிவிருத்தியோ ஏற்படவில்லை. இதற்குப் பெரும்பாலும் வடக்கிலேயே பசுக்களை வாங்கி வடக்குக்குள்ளேயே விநியோகிப்பதும் ஒரு காரணம். இங்கு மாடுகள் கைமாற்றப்பட்டு இடம்மாற்றப்படுகின்றனவே தவிர அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. மாடுகளுக்கிடையில் அக இனக்கலப்பு நிகழ்வதால் பசுக்களின் தரம் குன்றிப் பால் உற்பத்தியும் வீழ்ச்சி காணத் தொடங்கியுள்ளது.

இதனால் வடக்குக்குள்ளேயே மாடுகளை வாங்கி வடக்குக்குள்ளேயே விநியோகிக்கும் திட்டத்தைக் கைவிடுமாறும், வேறு மாகாணத்தில் இருந்து பசுக்களைக் கொண்டுவர முடியுமாக இருந்தால் மாத்திரமே வாழ்வாதாரமாகப் பசுக்களை வழங்கும் திட்டத்தை முன்னெடுக்குமாறும் அரசசார்ப ற்ற நிறுவனங்களிடம் கோரியுள்ளோம்.

இப்போது பசுமாடுகளை வழங்குவதைவிட, உள்ளூரில் அக இனக்கலப்பில் தரம் குறைந்து செல்லும் பசுமாடுகளைத் தரம் உயர்த்தும் திட்டமே அவசியம். இதற்கு நல்லினக் காளைகளை வடபகுதிக்கு எடுத்துவரவேண்டும்.

சில நிறுவனங்கள் தரகர்கள் மூலமாகவே மாடுகளைக் கொள்வனவு செய்கின்றன. வடக்கில் போதிய எண்ணிக்கையில் நல்லின மாடுகள் இல்லாமையால், பசுமாடுகள் களவாடப்பட்டுக் கடத்தப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்காகக் கால்நடை விற்பனையில் ஈடுபடும் முகவர்களை எமது அமைச்சில் உடனடியாகப் பதிவு செய்யுமாறு கோரவுள்ளோம்.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட முகவர்களிடம் இருந்து மாத்திரமே, அதுவும் கால்நடைத் திணைக்களத்தால் காதுகளில் அடையாளம் இடப்பட்ட மாடுகளை மாத்திரமே அரசசார்பற்ற நிறுவனங் கள் வாங்கி விநியோகிக்க வேண் டும் எனவும் இது பற்றிய தரவுகள் உடனுக்குடன் அமைச்சில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் இக்கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது ஓரளவுக்கேனும் மாடுகள் களவாடப்படுவதையும், கடத்தப்படுவதையும் தடுக்க உதவும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பசு மாடுகளை வெட்டிய பாதகர்களுக்கு மறியல்

யாழ். துன்னாலை பகுதியில் உள்ள வீடொன்றில் திருடிய இரண்டு பசு மாடுகளை வெட்டி அதனை இறைச்சியாக்கிய இரண்டு சந்தேக நபர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித் துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன், நேற்று முன்தினம் சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

திருடிய பசுமாடுகளை இராஜகிராமம் பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் இறைச்சியாக்குவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் அவ்விடத்துக்கு சென்ற நெல்லியடி பொலிஸார், சந்தேக நபர்களை கைது செய்ததுடன், 35 கிலோகிராம் மாட்டிறைச்சியையும் மீட்டனர்.

பின்னர், சந்தேகநபர்களை நீதவானின் வாசஸ்தலத்தில் சனிக்கிழமை மாலை ஆஜர்ப்படுத்திய போது நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராமநாதன் சோதிலிங்கம்

### (அப்பையா அண்ணர்)

சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சோதிலிங்கம் 05.12.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் இராமநாதன் செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான தவரத்தினம் யோகப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் தேவியின் அன்புக் கணவரும் சிவகுமார் (கனடா), செல்வகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு தந்தையும் இரஞ்சினி (கனடா), சுமதி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தட்கரத்தினம், காலஞ்சென்ற பூமணி, தவராசா, இராசலட்சுமி (அவுஸ்திரேலியா), மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற குலவீரசிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற வேலாயுதம், காலஞ்சென்ற மகேந்திரன் விமலாதேவி, சோமசேகரம் (அவுஸ்திரேலியா), சிறீதரன் (கனடா), சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி (மலேசியா), சிவனேஸ்வரி, காலஞ்சென்ற கணேசதாசன் ஆகியோரின் மைத்துனரும் இராகவன் சிவானி (கனடா), நிசானி (கனடா), சிபீசன் (நோர்வே), மீராங்கி (நோர்வே), கபிலன் (நோர்வே) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.12.2014) இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெற்று திருவடிநிலை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


(8576)

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.
தொடர்பு
021 3001905

தகவல்:-
குடும்பத்தினர்.



## விளையாட்டால் விளைந்த விபரீத மரணங்கள்



ரே சாப்மேன்


ஹங்க் கேதர்ஸ்

சமீபத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸ் பந்து தாக்கி இறந்துபோனது உலகம் அறிந்த துயரம். கிரிக்கெட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பல்வேறு விளையாட்டு வீரர் களுக்கு நேர்ந்த துயரங்கள் இவை... ரெக்கி லெவிஸ் (Reggie Lewis) மிகச்சிறந்த அமெரிக்க கூடைப்பந்து விளையாட்டு வீரர். 1993இல் ஒரு பயிற்சி ஆட்டத்தின்போது நெஞ்சு வலியில் மைதானத்தில் விழுந்தவர். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிர் நீத்தார்.

2010 வின்ட்டர் ஒலிம்பிக்ஸில் நோடர் குமாரிட்ஸ்விலி (Nodar Kumaritashvili) என்ற ஜோர்ஜியாவைச் சேர்ந்த 21 வயதான இளம் பனிச்சறுக்கு வீரர் எதிர்பாராதவிதமாக பக்கவாட் டில் இருந்த பாதுகாப்பு தடுப்பில் மோதி தலைகுப்புற விழுந்தார். ஹெல்மெட் அணிந்திருந் தாலும் மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாய் மிக மோசமாக சிதைந்ததால், களத்தில் ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் உடனடியாக மரணம் அடைந்தார். குத்துச் சண்டை வரலாற்றில் முதல் அதிகாரபூர்வமான பலியாகக் கருதப்படுபவர் தென் கொரியா வின் கிம் டுக் கூ. (Kim Duk-koo) நவம்பர் 18, 1982இல் நடந்த உலக சம்பியன்ஷிப் போட்டி யில் அமெரிக்காவின் ரே மான்சினியுடன் மோதினார். அநியாயமாகத் தலை யில்குத்து வாங்கி கோமா நிலைக்குப் போய் நினைவு திரும்பாமலே இறந்து போனார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ரே சாப்மேன் (Ray Chapman) ஒரு முன்னணி பேஸ்பால் வீர ராக 1910களில் கலக்கி எடுத்தவர். ஆகஸ்ட் 17, 1920இல் கார்ல் மேய்ஸ் என்ற வீரர் வீசிய பந்து அடி பலமாகப் பட்டதால், சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தவர், 12 மணிநேரம் கழித்து மருத் துவமனையில் உயிரை விட்டார். அதன்பிறகுதான் பேஸ்பாலுக்கென ஹெல்மெட் ஒன்றை வடிவமைத்து பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

ஹங்க் கேதர்ஸ் (Hank Gathers) என்ற அமெரிக்க கூடைப்பந்தாட்ட வீரர் சிறந்த முன் கள வீரராகக் கூடைப்பந்து விளையாட்டில் பெயர் எடுத்தவர். மார்ச் மாதம் 4ஆம் திகதி 1990ஆம் வருடம் உள்ளூர் விளையாட்டில் பங்கேற்று விளையாடியபோது பந்து நெஞ்சில் பட்டு கோர்ட் டில் விழுந்தார். ஏற்கனவே சில மாதங்களுக்கு முன் இதயத்துடிப்பில் பிரச்சினை இருந்து சிகிச்சை எடுத்து வந்த அவரின் உயிர் பார்வையாளர்கள் முன்னிலை யில் பிரிந்து எல்லோரையும் அதிர்ச்சியில் உறையவைத்தது. விளையாட்டு பல நேரங்களில் வினையாகும்!





பிலிப் ஹியூக்ஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி தடுப்பணையில் மோதி வாகனம் விபத்து



கிளிநொச்சி ஏ-9 வீதியில் வடி ரக வாகனம் ஒன்றின் முன்சில்லுக்கு காற்றுபோனமையால் அருகிலுள்ள தடுப்பணையில் மோதி விபத்திற்குள்ளானது.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவை பணிமனை முன்பாக இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்த குறித்த வாகனம் திடீரென முன்சில்லு காற்று போனமையையடுத்து அருகில் இருந்த வீதி தடுப்பணையுடன் மோதி வீதிக்கு குறுக்காக நின்றது.

இதில் பயணித்த சாரதி மற்றும் உதவியாளர் எதுவித காயமுமின்றி உயிர்தப்பினார்.

இவ்விபத்தினை அடுத்து சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டது.

உடனடியாக சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் விபத்தை பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணையையும் மேற்கொண்டனர். (2-254)

# மருத்துவ சிகிச்சைக்கு பயணிக்க 86 நோயாளர்களுக்கு நிதியுதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரையில் மருத்துவ சிகிச்சைக்கு செல்லும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 86 நோயாளிகளுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்குவதற்காக ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ரூபா நிதியை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் யுனிசெவ் நிறுவனத்திடம் பெற்று பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 47 பேருக்கும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 33 பேருக்கும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 7 பேருக்கும் வழங்க மருத்துவ சிகிச்சைக்கான போக்குவரத்து உதவி நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நோயாளர்கள் தூர இடங்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கு செல்லும் போது இவ்விதமான உதவிக் கொடுப்பனவு வழங்கப்படுவதுவழக்கமானதாகும்.


அதிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் தூர இடங்களிலிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு அல்லது யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ,கண்டி போன்ற தூர இடங்களுக்கு செல்பவர்களுக்கே இவ்விதமான உதவித் தொகை வழங்கப்படுவது வழக்கமானதாகும்.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இந்த நிதி உதவித் திட்டம் நடைமுறையிலுள்ளது.

வடமாகாணத்தின் ஏனைய 4 மாவட்டங்களிலும் இதேபோன்ற மருத்துவ உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

ஒரு பயனாளி ஒரு வருடத்தில் மூன்று தடவை இந்த நிதியை இவ்விதமாக பெற்றுக் கொள்ள முடியும்.

அரச மருத்துவமனை சிகிச்சை ஆவணங்களை காண்பித்து கடிதம் ஒன்றை எழுதி கிராம அலுவலகரிடம் சிபாரிசைப் பெற்று பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் உரிய படிவத்தை பூரணப்படுத்தி இந்த உதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)




## மோ.சைக்கிளும் உழவு இயந்திரமும் மோதிய விபத்தில் இருவர் படுகாயம்

(திருவையாறு)

மோட்டார் சைக்கிளும் உழவு இயந்திரமும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு கிளிநொச்சி வட்டக்கச்சி வீதியில் இடம்பெற்றது. இவ்விபத்து சம்பவத்தில் மு.நகுலேஸ்வரன் (வயது - 32) ; க.பரமேஸ்வரன் (வயது -38) ஆகியோரே படுகாயம் அடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி பயணித்த மோட்டார் வாகனமும் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி நோக்கி பயணித்த உழவு இயந்திரமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் பொது மக்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் அறிவிக்கப்பட்டு பல மணி நேரம் கடந்த நிலையில், அவ்விடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணையை நடத்தினர். (2-273)

# தமிழர் பிரச்சினையை எவ்வாறு தீர்த்து வைக்கப் போகின்றார்கள்

## வேட்பாளர்கள் பதிலளித்தால் பேசுவோம் என்கிறார் சுரேஷ் எம்.பி



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தமிழர் எதிர்கொள்ளும் பிரதானமான பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகிறார்கள் என்பது பற்றிய யோசனைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகளுக்கோ, சமஷ்டி முறையிலான தீர்வுக்கோ ஆதரவளிக்கப் போவதில்லை என்று எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, தெரிவித்துள்ளது குறித்து, வவுனியாவில் நேற்று முன்தினம் ஈ.பி.ஆர்.எல்.எப். மத்திய குழு கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார் .

"தமிழர்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப்போகிறார்கள் என்ற வேட்பாளர்களின் யோசனைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திருக்கிறது. அவை வெளியான பின்னரே யாரை ஆதரிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானிக்கும்.

ஊழல் இருக்கிறது என்று எமக்குத் தெரியும், குடும்ப ஆட்சி நிலவுகிறது என்பதும் தெரியும். இவை அகற்றப்பட வேண்டும் என்பதையும நாம் அறிவோம். ஆனால் தமிழர்கள், வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

வடக்கிலுள்ள மக்களின் பிரதானமான பிரச்சினை, போர் முடிந்த பின்னரும், அங்குள்ள பொதுமக்களில் ஒரு பகுதியினரால் சொந்த நிலங்களுக்குச் செல்ல முடியவில்லை. அவர்களின் நிலங்களை படையினர் தொடர்ந்து அபகரித்து வருகின்றனர். போர் முடிந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் நாம் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கிறோம்.

மைத்திரிபால சிறிசேனவோ அல்லது போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களோ, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகிறார்கள் என்று அறிந்து கொள்ள கூட்டமைப்பு விரும்புகிறது.

இதற்கான பதிலை நாம் வேட்பாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். அவ்வாறு பதிலளித்தால் அவர்களுடன் பேசுவோம்.

இறுதி முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள எல்லாக் கட்சிகளும் இணைந்தே மேற்கொள்ளும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-250)

## பற்றைகள் சூழ்ந்த பகுதிகளை துப்புரவு செய்யுங்கள்- மக்கள்

கிளிநொச்சி திருவையாறு பிரதான வீதியின் இருமருங்கிலும் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதால் அப்பாதையூடாக பயணிப்போர் மிகுந்த அச்சத்துடன் செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

திருவையாறு முதலாம் பகுதி பிரதான வீதியின் இரு மருங்குமே பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதாகவும் இரவு வேளைகளில் பயணிப்போர் சிரமத்தின் மத்தியில் பயணிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்திற்கு முன்னர் இவ்வீதியின் ஒரு மருங்கை கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்க ளத்தினர் துப்பரவு செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே பொது அமைப்பினர் இதில் கவனம் செலுத்தி பற்றை சூழ்ந்துள்ள பகுதிகளை துப்புரவு செய்ய முன்வரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

### வஞ்சியன் குளம் மக்கள்

# பாரம்பரிய கலைகளில் சிறந்து விளங்குகின்றனர்

ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு



வஞ்சியன்குளம் கிராமமானது கல்வியிலும், ஆன்மீகத்திலும், பாரம்பரிய கலைகள், நாட்டுக்கூத்து, பாரம்பரிய சித்த வைத்திய துறையிலும்சிறந்து விளங்குவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நானாட்டான் வஞ்சியன்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது இந்நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப் பாடசாலை மாணவர்கள் பல்வேறு துறை சார்ந்த அனுபவங்கள் கொண்டவர்களாக, சிறந்த நல்ல தலைவர்களாக எதிர் காலத்தில் வரவேண்டும். அதற்காக வாழ்த்தி வரவேற்கிறேன்.இந்த மாணவர்களின் வளமான கற்றலுக்காக கற்றல உபகரணங்களுக்கு நிதியுதவி வழங்கிய வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டியா புளியங்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆண்டியா புளியங்குளம் கிராம மக்கள் தமக்கான காணியை இராணுவ அதிகாரிகள் ஒப்படைக்காவிடின் இன்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்தனர்.

ஆண்டியா புளியங்குளம் கிராமத்தில் காணிகளை இராணுவம் அபகரிப்பதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா ஆண்டியா புளியங்குளத்தில் விளையாட்டு மைதானம் ஆரம்ப பாடசாலை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட 12 ஏக்கர் நிலத்தினை இராணுவம் தமது நிலம் என உரிமை கோருவதாகவும் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்ட காணி என பதாகைகளை அமைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் இக்காணி பிரதேச செயலாளரினால் மக்களின் தேவைக்காக ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை இக் காணிகளை துப்புரவு செய்து முதற்கட்டமாக விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு கிராம மக்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டதாகவும் இக் காணிகளுடன் சேர்த்து தற்போது விவசாயம் செய்து வரும் 160 ஏக்கர் வயல் நிலத்தையும் இராணுவ தேவைக்காக சுவீகரித்துள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் காணிகளை துப்புரவு செய்ய மக்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் இடையூறு விளைவித்தபோது அங்கு இராணுவ அதிகாரி வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடியிருந்த போதிலும் சமரசம் ஏற்படாத நிலையில் தொடர்ந்தும் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பொலிஸ் அதிகாரிகளும் சமரசம் செய்ய முயற்சித்தபோதிலும் அதுவும் பயனற்று ஆர்ப்பாட்டம் சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்றிருந்தது.

இந் நிலையில் இன்றையதினம் தமக்கான காணியை ஒப்படைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தாம் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (2-250)

## வீதி மின் விளக்குகளை திருத்தி ஒளிர விடுங்கள்

### மக்கள் கோரிக்கை

வவுனியா குருமன்காடு பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம் பெற்றது. இதுதொடர்பில் தெரியவருவதாவது,

குருமன்காடில் கார் வாகனத்துடன் துவிச்சக்கர வண்டி மோதியதில், துவிச்சக்கர வண்டியில் பயணித்தவரின் கால் வாகன சில்லுக்குள் அகப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வவுனியா குருமன்காடுப்பகுதியில் வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின் விளக்குகளின் வெளிச்சமின்மையே விபத்துக்கான காரணம் என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (2-250)



மத்தியரசின் நிதியுதவியில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் முதன்முறையாக அமைக்கப்படும் குருதி சுத்திகரிப்பு சிகிச்சை நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது. (படம்:-குருமன்காடு செய்தியாளர்)

## பிள்ளைகளின் கல்வி அடைவு மட்டம் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு



கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் மு/திருமுறிகண்டி இந்து மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் 200 பேருக்கு விழிப்புணர்வு செயலமர்வொன்று அண்மையில் நடத்தப்பட்டது.இதில் வளவாளர்களாக தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் கிளிநொச்சி மாவட்ட அதிகாரி இ.செந்தூரன், இவ் அலுவலகத்தின் உளசமூக உத்தியோகத்தர் பா.கோபி ஆகியோர்கலந்து கொண்டனர்.

பிள்ளைகளின் ஒழுக்கம், பாடசாலை இடை விலகல், பிள்ளைகளின் கல்வி அடைவு நிலை, சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள், பெற்றோர் பொறுப்புணர்வு ஆகிய விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. (2)

## பாடகர்களுக்கான குரல் தேர்வு போட்டி

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியின் ஏற்பாட்டில், தேன்சிட்டு அமைப்பினால், கிளிநொச்சி மாவட்ட பாடகர்களுக்கான மாபெரும் குரல் தேர்வு போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை 4 ஆம் குறுக்குத்தெரு, கனகபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள நண்பர்கள் விருந்தகத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற வெற்றியாளர்களுக்கு உடனடி பணப்பரிசு வழங்கப்படவுள்ளதுடன் இவர்கள் மாகாண மட்ட போட்டிக்கும் தகுதி பெறுவர்.

அத்துடன் மாகாண மட்டத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு இந்தியாவில் பயிற்சி பெறும் வாய்ப்பு வழங்கப்படும். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாடகர்களுக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

இக் குரல் தேர்வு போட்டியில் வயது வேறுபாடின்றி அனைவரும் பங்கேற்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரி, இல.05, இரண்டாம் குறுக்குத்தெரு, கனகபுரம், கிளிநொச்சி எனும் முகவரியில் தமக்கான பதிவுகளை மேற்கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (2-277)

## விதை தானிய விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களின் சுயமுயற்சிகளை ஊக்குவிக்கலாம்

### சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வீட்டுக்கு வீடு செய்யப்படுகின்ற சுயமுயற்சி ஒட்டுமொத்தமாக எமது தேசத்தின் அழகுக்கும் பொருளாதார வளத்துக்கும் பலம் சேர்க்கும் ஒன்றாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பசுமைத்தேசம் வீட்டை சுற்றி ஒரு விளைச்சல் என்ற விதைதானியம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மக்களுக்கு விதை தானியப் பொதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதுமுறிப்பு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பாபு தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொணட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில், பசுமைத் தேசம் எனும் இந்த வீட்டுத்தோட்டத்திற்கான விதை தானிய விநியோக திட்டத்தின் மூலம் நாம் எமது மக்களின் சுயமுயற்சிகளை ஊக்குவிக்க எண்ணுகின்றோம்.

வீட்டுக்கு வீடு செய்யப்படுகின்ற சுயமுயற்சி ஒட்டுமொத்தமாக எமது தேசத்தின் அழகுக்கும் பொருளாதார வளத்துக்கும் பலம் சேர்க்கும் ஒன்றாக அமையும்.முன்பிருந்த எமது இந்த மண்ணின் வளங்கள் அழிக்கப்பட்ட நிலையில் அதை மீளவும் கட்டியெழுப்பும் கனவு எமது மக்களின் மனதில் உள்ள போதும் அதற்கான பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் நிலங்கள் வெறுமையாக இருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆயினும் இத்தகைய சிறு விவசாயம் தொடர்பான உதவிளை நீங்கள் பெற்றுக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக எமது நிலத்தை வளர்த்தெடுக்கவேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

இந்த உதவிகள் அரசியல் மயப்படுத்தப்பட்ட விடயங்கள் அல்ல. உங்கள் வாழ்வில் சிறு ஆதாரமாக நம்பிக்கையை தர வேண்டுமென்பதற்காக தரப்பட்ட உதவி என்பதை நீங்கள் மனதில் விதைத்துக்கொள்ளுங்கள்.

எமது வாழ்வின் நெருக்கடிகளுக்கு ஒரு மாற்றம் வரக்கூடிய ஒளிக்கீற்றுகள் தென்படுகின்றன. அவை பிரகாசித்து நமது ஏக்கங்களுக்கு ஒரு நல்ல தீர்வை கொண்டு வரும். அதற்கு ஆட்சியாளர்கள் தொடர்பான தெளிவும் மாற்றத்திற்கான சிந்தனையும் உங்கள் மனதில் இருக்கவேண்டும் என தெரிவித்தார்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா, அக்கராயன் பிரதேச அமைப்பாளர் கரன், அக்கராயன் பிரதேச கட்சிக்கிளையின் செயலாளர் கதிர்மகன்,கட்சியின் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் சர்வானந்தா, மாற்றுவலுவுள்ளோர் சங்க இணைப்பாளர் சாந்தி, பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளரும் கட்சியின் மாவட்ட கிளையின் உபதலை வருமான பொன்.காந்தன் மற்றும் மாதர சங்க நிரவாகிகள், கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டனர். (2)




## 10 மாதத்திற்கான உதவிப்பணம் 42 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் டிசெம்பர் மாதம் 42 பேருக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கும் 10 மாத பணம் ஒரே தடவையில் வழங்கப்பட்டுள்ளது. வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கென மேலதிகமாக ஒரு இலட்சத்து 7 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டை அனுப்பி வைத்துள்ளது.

பிரதேச செயலரும் பிரதேச செயலக பிரிவின் சமூக சேவைகள் அலுவலரும் இணைந்து எடுத்த முயற்சியின் பயனாக இந்நிதி வழங்கப்பட்டு, உரியவர்களுக்கு தபாலகங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. (அ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1005

## ஒரு ஊருல ஒரு பூதம்!



அது ஊரை ஒட்டி ஒரு காடு.

அங்கே ஒரு பூதம் இருந்தது.

கஷ்டத்தில் இருக்கும் அப்பாவிகளுக்கு, நல்லது செய்வது போல செய்து, பிறகு அவர்களை அடிமையாக்கிக் கொள்ளும்.

அதே ஊரில் இருந்த ஒரு வியாபாரிக்கு, தொழிலில் நஷ்டம் ஏற்பட்டது.

இறந்து விடலாம் எனக் காட்டுக்குள் வந்த வியாபாரியைத் தடுத்த பூதம், உனக்கு ஒரு வரம் தருகிறேன்.

வீட்டுக்குப் போய்ப் பார்.

வீடு முழுவதும் செல்வம் இருக்கும். ஆனால், ஒரு நிபந்தனை.

10 வருடங்களுக்குத்தான் அனுபவிக்கலாம்.

பிறகு, நீ எனக்கு அடிமை என்றது.

சம்மதித்த வியாபாரியிடம் பத்திரம் ஒன்றில் எழுதி வாங்கிக்கொண்டு, "என்னை ஏமாற்ற நினைக்காதே.

நான் நினைத்தால், எந்த உருவததையும் எடுப்பேன்" என்றது.

வீட்டுக்குப் போனான் வியாபாரி.

10 வருடங்கள் செல்வச் செழிப்போடு வாழ்ந்தான்.

குறிப்பிட்ட நாளில், ஒரு சாக்குப் பையை எடுத்துக்கொண்டு காட்டுக்கு வந்தான்.

பூதத்தின் குகைக்கு அருகில் வந்ததும், "ஏ... பூதமே, நினைத்த உருவத்தை அடைவாய் என்று சொன்னாயே, எலியாக மாறிக் காட்டு பார்ப்போம" என்றான்.

உடனே, பூதம் சுண்டெலியாக மாறியது.

வியாபாரி சட்டென அதைப் பிடித்து சாக்குப் பையில் போட்டு, அடிக்க ஆரம்பித்தான்.

பூதம் வலியால் கதறியது.

"என்னை விட்டுவிடு" என்று கெஞ்சியது.


"நான் கையெழுத்துப் போட்டுக்கொடுத்த பத்திரத்தைக் கொடுத்துவிடு.

பிற அடிமைகளையும் விடுவிக்க வேண்டும்" என்றான் வியாபாரி.

பூதம் சம்மதித்தது.

குகைக்குள் இருந்த அடிமைகள் விடுவிக்கப்பட்டார்கள். அடிமைப் பத்திரங்களைக் கொடுத்துவிட்டு, தப்பித்தால் போதும் என ஓட்டம் பிடித்தது பூதம்.

## தங்கவால் அணில்!



அந்தக் கிராமத்தில் மழை பெய்து வெகு நாட்களாகி விட்டது.

ஏரி, குளம் எல்லாம் வற்றிப் போய்விட்டன. ஏழை விவசாயியான தம்பிதுரை, தன் சிறிய தோட்டத்தை நம்பியே இருந்தான்.

செய்வது தெரியாமல், ஒரு மரத்தடியில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தான்.

அப்போது, மரத்திலிருந்து இறங்கிய ஓர் அணில், அருகில் வந்து நின்றது. அதன் வால், தங்க நிறத்தூரிகையாக ஜொலித்தது. "என்ன நண்பரே! கவலையோடு இருக்கிறீர்கள்?" என்று கேட்டது.

"என்னவென்று சொல்வேன் அணிலே! என் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கிறேன" என்று தன் கவலையைச் சொன்னான் தம்பிதுரை.

"கவலைப்படாதீர், நான் உதவுகிறேன். உங்கள் துண்டை விரித்து வையுங்கள" என்றது அணில்.

தம்பிதுரை, முண்டாசுத் துண்டை விரித்தான். அணில், அந்தத் துண்டின் மீது ஏறி, தன் வாலை படபடவென குலுக்கியது.

தங்கத்துகள்கள் உதிர்ந்தன. நண்பரே! இந்த தங்கத்துகள்களை விற்று, பிழைக்கும் வழியைப் பாருங்கள்! என்று சொல்லிவிட்டு, மரத்தில் ஏறி மறைந்தது அணில்.

தம்பிதுரை, அந்தத் தங்கத்துகள்களை எடுத்துச்சென்று, ஒரு நகைக் கடையில் விற்றான். வீட்டுக்குத் தேவையான அரிசி, காய்கறிகளை வாங்கினான். ஒரு மாதம் சுகமான வாழ்க்கை வாழ்ந்தான். பணம் தீர்ந்ததும் பழைய இடத்துக்குச் சென்றான்.

அந்தத் தங்கவால் அணிலும் வந்தது. விஷயத்தை அறிந்ததும், நண்பரே, நான் தங்கத்துகள்களைக் கொடுத்தது, அந்தப் பணத்தை முதலீடாக வைத்து தொழில் செய்யத்தான். நீயோ, பணம் கையில் கிடைத்ததும் சோம்பேறியாக உட்கார்ந்துவிட்டாய். என்னால் உனக்கு உதவ முடியாது! என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது.

ஐயோ... கிடைத்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தாமல் போய்விட்டனே!' என்று வருந்தினான் தம்பிதுரை.

## ஹலோ ஓவியரே!

அந்தக் கரடிக்குட்டிக்கு,சூரிய உதயத்தை வரைய ஆசை.

தன் அம்மாவிடம், அம்மா, காலையில் சீக்கிரம் எழுப்பிவிடு. ஆற்றங்கரைக்குப் போய் வரையப்போறேன் என்றது.

அருகே இருந்த பாட்டிக் கரடி நாளை உன்னால் வரைய முடியாது என்றது.



இந்தப் பாட்டி இப்படித்தான் எதையாவது பேசிட்டே இருக்கும்' என்று அலட்சியமாக நினைத்த குட்டிக்கரடி, போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கிவிட்டது.

மறுநாள், கரடிக்குட்டி கண் விழித்தபோது விடியத் தொடங்கி இருந்தது. ஐயோ அம்மா, என்னை ஏன் எழுப்பலே? என்று கேட்டது.

ஒருமுறை எழுப்பிப் பார்த்தேன். நீ எழுந்துக்கலே, விட்டுட்டேன என்றது அம்மா.

போம்மா... உன்னை நம்பினேன் பாரு என்ற கரடிக்குட்டி, ஆற்றங்கரைக்குப் போவதற்குள், சூரியன் மேலே சென்றுவிட்டது.

ஒரு சேவலிடம் சென்று, சேவல் அண்ணா, காலையில் கொஞ்சம் சத்தமாகக் குரல் கொடு என்றது.

இதை அறிந்த பாட்டிக் கரடி, நாளைக்கும் நீ வரைய மாட்டே என்றது. மறுநாள், கரடிக்குட்டி கண்விழித்தபோது வழக்கத்தைவிட தாமதம் ஆகியிருந்தது. நேராக சேவலிடம் சென்று, ஏன் சத்தமா கூவலை? என்று கேட்டது.

சரிதான் போடா! உன் ஒருத்தனை எழுப்புறதுதான் என் வேலையா? என்று விரட்டியது.

அன்று இரவு. சார்ட் பேப்பர், கலர் பென்சில் எல்லாவற்றையும் தயாராக எடுத்துவைத்த கரடிக்குட்டி, "மற்றவங்களை நம்பி பயன் இல்லை. நானே எழுந்துக்கப்போறேன என்றது.

சபாஷ் உன்னை நம்ப ஆரம்பிச்சுட்டே. நாளை நிச்சயம் நீ சூரிய உதயத்தை வரைவாய என்றது பாட்டிக் கரடி. மறுநாள் அதன் சார்ட் பேப்பரில் அழகான சூரிய உதயம் இருந்தது.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2014 08

- 1609 - இத்தாலியின் மிலான் நகரில் அம்புரோரியானோ நூலகம் திறக்கப்பட்டது. இதுவே ஐரோப்பாவின் இரண்டாவது பொது நூலகம் ஆகும்.
- 1864 - இங்கிலாந்தில் கிளிஃப்டன் தொங்கு பாலம் திறக்கப்பட்டது.
- 1912 - அல்பேனியாவின் "கோர்சே" நகரை ஓட்டோமான் படையிடமிருந்து கிரேக்கர்கள் கைப்பற்றினர்.
- 1941 - பசிபிக் போர்: சீனக் குடியரசு ஜப்பான் மீது போரை அறிவித்தது.
- 1941 - பசிபிக் போர்: சீனாவில் அமைக்கப்பட்டிருந்த கொரிய அரசு ஜப்பான் மற்றும் ஜேர்மனி மீது 1910 இலிருந்து ஜப்பான் வசமிருந்த கொரிய மக்கள் சார்பாக போரை அறிவி த்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: வேக் தீவு மீது ஜப்பான் முதற்தடவையாக போர் தொடுத்தது.
- 1941 - பெரும் இன அழிப்பு: போலந்தின் லோட்ச் என்ற இடத்தில் யூதர்களைக் கொல்லுவதற்கு நாசிகள் முதன் முதலாக நச்சு வாயுப் பேருந்தைப் பயன்படுத்தினர்.
- 1949 - சீனக் குடியரசின் தலைநகர் நான்சிங்கிலிருந்து தாய் பெய் நகருக்கு மாற்றப்பட்டது.
- 1985 - சார்க் அமைப்பு இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, நேபாளம், மாலைதீவு மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளினால் உருவாக்கப்பட்டது.
- 1991 - சோவியத் ஒன்றியத்தைக் கலைப்பதென ரஷ்யா, பெலாரஸ், உக்ரேன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கூடி முடிவெடுத்தனர்.

### பிறப்புகள்

- 1935 - தர்மேந்திரா, இந்திய நடிகர்
- 1946 - சர்மிளா தாகூர், இந்திய நடிகை
- 1947 - தாமஸ் சிச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1976 - நிருபமா வைத்தியநாதன், இந்திய டென்னிஸ் வீராங்கனை
- 1985 - டுவைட் ஹவர்ட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1980 - ஜான் லெனான், ஆங்கிலப் பாடலாசிரியர், இசையமைப்பாளர் (பி. 1940)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 14

....அந்த ரூவா அறுவதையும் பதினோராராவது மாசமே வந்து பலியாக்கெடந்து, வாய்வலி வகுத்த வலின்னு வாங்கிட்டுப் போயிருவான் அவுக அப்பன்.

"கோ..... கோ.... கோ..... கோடாங்கி ....எங்க சீ... சீ..... சீ... சின்னத்தாவுக்குப் பேய் புடிச்சிருச்சாம். கையோட கூட்டியாரச் சொல்லுச்சு பெ..பெ..பெ.. பெரியாத்தா."

இருளப்பக் கோடாங்கிக்கு அந்த சில்லாவிலயே நல்ல பேரு. வருச நாட்லயிருந்து வாலாந்தூர் வரைக்கும் இருளப்பண்ணாத் தெரியும் எல்லாருக்கும். அந்தாளு உடுக்குச் சத்தம் கேட்டா முனியோ பேயோ ஊர் எல்ல வரைக்கும் திரும்பிப் பார்க்காம ஓடிப் போகுமாம் ஓடி.

கோடாங்கி சுத்தபத்தமா இருக்கிற ஆளு; பக்தியோட தொழில் செய்கிற கோடாங்கிக்கு உடுக்கன்னா உசுரு. சொவத்தல சாமி படத்துக்கு மேல தான் அதத் தொடங்க விடறது. அத அவர்தான் தொடணும்; வேறயாரும் தொடக்கூடாது . அப்படித் தப்பித்தவறி யாராச்சும் தொட்டுட்டா, பழந் தேங்கா வச்சுக் கற்புரம் காட்டித் தீட்டுக் கழிக்காமத் தீண்ட மாட்டாரு.

உடுக்குங்கிறது அவுக குடும்பத்துக்கே சாமி. "சிவன் கிட்ட இருந்தடா மகனே... அடுத்து இவன்கிட்ட இருக்கு"ன்னு அடிக்கொருக்காச் சொல்லுவாரு அவுகப்பன் தங்கவேல் கோடாங்கி.

இருளப்பன் மனசுக்குள்ள ஒரு ஐதீகம். உடுக்க எடுத்து பக்கம் அடிச்சாக் கடவுளும், மறுபக்கம் அடிச்சா செத்துப் போன அவுக அப்பனும் கூடவே பேசுறதா ஒரு நெனப்பு.

இருளப்பன் உடுக்கைய உசுரா நெனக்கிறதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு. இந்த உடுக்க அவுக அப்பனே செஞ்சது. இவரு பத்து வயசுப் பயலா இருக்கிறப்பக் கூடவேயிருந்து பாத்தது.

மரங்கள்ல வேங்கு, வெள்ளெருக்கு, மஞ்சனத்தி, பாலா நால்ல ஒண்ணுதான் நல்லது உடுக்குச் செய்ய. வெண்கலத்துலயும் செய்வாக. அதுல சத்தம்கூட நல்லாதான் இருக்கும். ஆனா நாதம் அள்ளி எறியறதுல வெள்ளெருக்கங் கட்ட மாதிரி வேறொண்டும் வராது.



வெள்ளெருக்கங்கட்டைய ஒரே கட்டையா வாங்கி, ஒரே கடைசலாக் கடைஞ்செடுத்தாரு கோடாங்கி. ஒரு பக்கம் சந்திர வளையமாம்; மறுபக்கம் சூரிய வளையமாமம்.

வளையங்கள மூட இப்ப சவ்வு வேணும். மாடு உரிக்கிற மந்தைக்குப் பொழுது விடியப் போயிட்டாரு தங்கவேல் கோடாங்கி. மாட்டுப் பெருங்குடல வாங்குனாரு. அதுல ஒட்டியிருந்த கறிய மட்டும் சுரண்டி எறிஞ்சிட்டு வெறும் சவ்வா வாங்கிட்டு வந்தாரு. வெது வெதுங்கின்ற வெந்நியில முக்கி ஊற வைச்சு அதுல ஒட்டியிருந்த பிசுற எடுத்துத் துண்டாத் தூர எறியவும், கண்ணாடி மாதிரி பள பள பளன்னு மின்னுது சவ்வு.

ஊறப் போட்ட புளியங்கொட்டைய ஆட்டொரல்ல போட்டு, "ஆட்றா மகனே"ன்னாரு. இருளப்பனுக்கு ஆட்டத் தெரியல. பள்ளிக்கூடம் படிக்காத பய ஓடி ஓடி வந்திர்ற மாதிரி குழிய விட்டு எந்திரிச்சு எந்திருச்சு வந்திரு கொழவி.

"எந்திர்"றான்னு அவன ஒரே எத்தா எத்தித் தள்ளிட்டு அவரே ஒக்கார்றாரு. சும்மா மழு மழு மழுன்னு புளிய வெதைய அரைச்சு, மண் சட்டியில வழிச்சுப் போட்டு, அத அடுப்புல சுட வச்சு, களிப் பதத்துல எறக்கிட்டுக் சொல்றாரு: இதுக்கு கீக்கொண்டது தாண்டா மகனே எந்தப்பசையும்.

(தொருடம்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...ஆனால் நாம் ஒரு போதும் நம்முடன் இருப்பதில்லை. நாம் எப்பொழுதும் மனிதர்களுடன் இரைச்சலுடனுமே இருக்கிறோம். நாம் நம்மை மற்றவர்களுடன் அடையாளப்படுத்திக்கொள்கிறோம். நம்முடன் அல்ல. நாம் நம்முடனே இருப்பதற்கு அஞ்சுகிறோம். நாம் நம்முடன் இருக்கும்போது தனியாகவும் பயமாகவும் உணருகிறோம்.


## கவலைகள் இன்றி வாழ்தல்!

நாம் நம்முடன் இருக்கும் போது மனச்சோர்வடைகிறோம்.

நீங்கள் உங்கள் தாயின் கருவறையில் தனியாகவே இருந்தீர்கள். அதுவே உங்கள் உண்மை இயல்பு. அதற்கு பிறகு என்னவாயிற்று? நீங்கள் சந்தோஷமாக இருப்பதற்கு மனிதர்கள் வேண்டும் என்று நினைக்க ஆரம்பித்து விட்டீர்கள். நீங்கள் மனிதர்களுடன் சேர்ந்து அழுகிறீர்கள். மனிதர்களுடன் பேசுகிறீர்கள். மனிதர்களாகவே கஷ்டமும் படுகிறீர்கள். உங்களுக்கு உங்களுடனயே கொண்டாடுவது எப்படி என்பது தெரியவில்லை.

நீங்கள் தனியாக இருக்கும் பொழுது உங்களுக்குள் போராட ஆரம்பித்துவிடுகிறீர்கள். உங்கள் உள் பேச்சுக்கள் ஆரம்பித்துவிடுகின்றன. உங்கள் கவலைகள் ஆரம்பித்து விடுகின்றன. எவ்வாறு இரச்சலை ஏற்படுத்துவது அல்லது யாரைக்கூப்பிட்டு பேசுவது அல்லது யாருடன் கணினி வழியாக . உரையாடுவது என்பது போன்ற மடத்தனமான விடயங்களை எண்ண ஆரம்பித்து விடுகிறீர்கள்.

எப்பொழுதும் மனிதர்களுடன் இரச்சலுடன் இருக்க வேண்டிய தேவை இருந்தால் நீங்கள் உங்களுடன் இருப்



பதற்கு நிச்சயமாக அஞ்சுகிறீர்கள் என்று அர்த்தம். உள்ளே பார்ப்பதற்கு அச்சமாக இருப்பதால் வெளியே பார்க்கிறீர்கள். நீங்கள் தியானிப்பவராக ஆகி விட்டால் சந்தோஷமாக இருப்பதற்கு உறவுகளை சார்ந்திருக்க வேண்டிய தேவையில்லை என்பதை கொஞ்சம் கொஞ்சமாக புரிந்து கொள்வீர்கள். உங்களுக்கு நீங்களே போதும். உங்களால் உங்களுடனேயே அமைதியாக இருக்க முடியவில்லை என்றால் பெயரளவிலான உறவு முறைகளில் சிக்கி உங்கள் இருப்புத் தன்மையின் வெளி விளிம்பிலே தங்கி விடுகிறீர்கள்.

முதலில் உங்களுக்கு உங்களுடனயே ஒரு உறவு தேவைப்படுகிறது. இது உறுதியாகவும் நிலையாகவும் இருக்குமானால் மற்றவர்களுடன் உறவு கொள்வது தற்செயலாகவே நிகழ்ந்து விடுகிறது. தற்சமயம் வெளி விளிம்பில் இருக்க வேண்டியது முக்கியமானதைப் போலவும், முக்கியமா

## ஆன்மீகம் 98

னது வெளி விளிம்பில் இருக்க வேண்டியதைப் போலவும் நடத்தப்படுகிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அதற்கு நீங்கள் உங்கள் பார்வை உள்நோக்கித் திருப்ப வேண்டும். நீங்கள் உங்களுக்குள் அமைதியை நிலைநிறுத்த வேண்டும்.


அதற்கு உங்கள் மனதைத் தாண்டிச் செல்லும் தைரியம் வேண்டும். நீங்கள் உங்களைத் தவிர மற்ற அனைவருக்கும் உங்களைச் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கத் தயாராக இருக்கிறீர்கள். ஏனெனில் அது உங்கள் அஹங்காரத்தை திருப்தி செய்கிறது.

நீங்கள் உங்களுக்கு நேரம் ஒதுக்கவில்லை. ஏனெனில் உண்மை வெளியே வந்துவிடும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை (1500) ஆயிரத்து 500 சுட்டிகளில் தீபமேற்றி வெகு பக்தி பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.







யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்லூரி முதல்வர் எஸ்.கே.எழில் வேந்தன் மற்றும் ஆரம்பப்பிரிவு உப அதிபர் செல்வி. சுமதி ஆகியோர் உரையாற்றுவதையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்; அதிபர், ஆசிரியர்கள் சகிதம் இருப்பதையும் படங்களில் காணலாம்.



யாழ்.சுன்னாகம் வாழ்வகம் விழிப்புலனற்றோர் மையத்திற்கு இந்தியாவின் பெங்களூரில் றோட்டறி கழகத்தின அல்சூர் கிளையினால் வழங்கப்பட்ட மூன்று மடிக்கணனி மற்றும் சலவை இயந்திரம் உள்ளிட்ட பொருட்கள் அண்மையில வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் யாழ்.இந்திய பிரதித் துணைத்தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி ஆகியோரினால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நிழல்கள்






ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ வின் பிறந்த தினத்தையொட்டி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கோம்பாவில் ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் அண்மையில் விசேட பூசை நிகழ்வும் மர நடுகை விழாவும் நடைபெற்ற போது...

(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கச்சதீவினை மீட்கக்கோரி சட்டப்பேரவையில் தீர்மானம்

**கச்சதீவைத் திரும்பப் பெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சட்டப்பேரவையில் கச்சதீவை மீட்கக் கோரும் தீர்மானத்தை தமிழக முதல்வர் ஓ.பி முன்மொழிந்து உரையாற்றினார்.**



தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கச்சதீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டதுதான்.

தமிழக மீனவர்கள் எவ்வித இன்னலும் இல்லாமல் தங்களுடைய வாழ்வாதாரத்தை மேற்கொள்ள ஏதுவாக கச்சதீவைத் திரும்பப் பெற வேண்டும்.

பாரம்பரிய மீன்பிடி பகுதிகளில் மீன் பிடிக்கும் உரிமையை இலங்கை அரசு தடுக்காமல் இருப்பதற்கும், தேவையான அனைத்து நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று முதல்வர் முன்மொழிந்தார்.

சட்டப்பேரவை உறுப்பினர்களான பலர் ஆதரித்துப் பேசினர். இதனை யடுத்து குரல் வாக்பின் மூலம் சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களையும் மீட்டெடுக்க உதவிய தமிழக அரசுக்கும், பிரதமர் நரேந்திரமோடிக்கும், மத்திய அரசுக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# இலங்கை கடற்பகுதிக்குள் இனிமேல் செல்வது இல்லை

தமிழகத்தின் 6 மாவட்ட மீனவர்கள், சர்வதேச கடல் எல்லையை தாண்டி இலங்கை கடற்பகுதிக்குள் பிரவேசிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளனர் என த இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகத்தின் இராமநாதபுரம், திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டிணம் மற்றும் காரைக்கால் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மீனவர்களே இந்த முடிவை எடுத்துள்ளனர். இதேவேளை இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 38 மீனவர்களையும் விடுவித்தல் உட்பட பல விடயங்கள் தொடர்பிலும் குறித்த 6 மாவட்ட மீனவரகள் பொது தீர்மானங்களை எடுத்துள்ளனர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 120 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 140 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 300 | 200 |
| தக்காளி | 150-160 | 220 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 40 | 35 | 60 |
| கோவா | 120 | 120 | 90 | 140 |
| கரட் | 170 | 180 | 150 | 200 |
| பூசணி | 30-40 | 40 | 20 | 50 |
| புடோல் | 60 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 50-70 | 80 | 90 | 100 |
| சின்ன வெங்காயம் | 60-105 | 100 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 100 | 100 |
| பாகற்காய் | 150-200 | 300 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 40-50 | 80 | 55 | 80 |
| பயற்றங்காய் | 250 | 280 | 240 | 200 |
| லீக்ஸ் | 200 | 260 | 200 | 240 |
| பீற்றூட் | 170 | 180 | 80 | 200 |
| கறிமிளகாய் | 180 | 340 | 300 | 240 |
| முருங்கைக்காய் | - | 350 | - | 200 |
| போஞ்சி | - | 200 | - | 200 |
| கத்தரிதம்புள்ள | - | 100 | - | 140 |
| கீரை - 1 பிடி | 15-35 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 60-80 | 120 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 150 | - | 200 |

# சொத்து விபரங்களை சமர்ப்பிக்க உத்தரவு

சொத்து விபரங்களை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வேட்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக 18 வேட்பாளர்களின் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களிடம் விசேட படிவமொன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணத்தில் சொத்து விபரங்கள் பற்றிய விபரங்களை குறிப்பிட்டு மீளவும் தேர்தல் செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இன்று காலை 9 மணி முதல் நண்பகல் வரையில் வேட்பு மனுக்களை தேர்தல் செயலகத்தில் தாக்கல் செய்ய முடியும்.

இவ்வாறு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் போது சொத்து விபரங்களையும் வேட்பாளர்கள் ஒப்படைக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.


சொத்து விபரங்கள் ஒப்படைக்கப் பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார் (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 216

டொறின் மன்மதநாயகம்




பிருதுவி பிருது




சக்தி வேல்

முனுசாமி தனது அம்மாவிடம் பொங்கலுக்கு ஒரு சைக்கிள் கேட்டான். “நீ இன்னும் வளர வேண்டும்” என்று சொல்லி விட்டாள் அம்மா. எனவே முனுசாமி சிவனுக்கு ஒரு கடிதம் எழுதினான். “அன்புள்ள சிவா, நான் மிகவும் ரொம்ப நல்ல பையன். எனவே எனக்கு ஒரு சைக்கிள் கொடுக்கவும்...” இதில் திருப்தி ஏற்படாமல் முனுசாமி அதைக் கிழித்துப் போட்டு விட்டு மீண்டும் எழுதினான்.


“அன்புள்ள சிவா, நான் அவ்வப்போது கொஞ்சம் தப்பு பண்ணி இருக்கிறேன். ஆனால் நல்ல பையன் தான். எனவே எனக்கு ஒரு சைக்கிள் அனுப்பி வைக்கவும்.” இதிலும் திருப்தி ஏற்படாமல் முனுசாமி அதைக் கிழித்துப் போட்டு விட்டான். அப்போது வீட்டில் முருகனின் பொம்மை ஒன்று இருப்பது நினைவுக்கு வந்தது. அதை எடுத்து துணியில் சுற்றி ஒரு பெட்டியினுள் வைத்து விட்டு வந்து எழுதினான்.

“அன்புள்ள சிவா, நீ உன் மகனை உயிரோடு பார்க்க வேண்டும் என்றால் உடனே எனக்கு ஒரு சைக்கிள் வாங்கி அனுப்பவும்”

தசா ஜெயா




அசோக் குமார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தனித்துவத்தைக் காட்ட தேர்தல் நல்லதொரு வாய்ப்பு

மகிந்தவுக்கும் மைத்திரிபாலவுக்குமிடையே பெரும் சிங்களப் பேரினவாதி யார் என்ற போட்டி ஆரம்பமாகிவிட்டது.

இதுவே சிங்கள வாக்குகளை அள்ளித் தருமென இருவரும் நம்புகின்றனர்.

நெருப்பு எரிய ஆரம்பிப்பதற்கு முன்னமே அங்கு பொறி பறக்கலாம் என்பதற்கு உதாரணமாக, இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் இப்போது பொறி பறக்க ஆரம்பித்துவிட்டது.

தேர்தலுக்கு இன்னமும் ஒரு மாதத்துக்கும் மேலுள்ளது. நியமனப் பத்திரத் தாக்கல் செய்யும் இறுதி நாள் இந்த மாதம் எட்டாம் திகதி.

பிரதான வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன உட்பட மொத்தம் பத்துப் பேர் இதுவரை தேர்தலில் போட்டியிட கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவால் உருவாக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய தலைவரான மகிந்தவும், அதே கட்சியின் பொதுச் செயலாளராகவிருந்த மைத்திரிபாலவும் இத்தேர்தலில் எதிரும் புதிருமாகப் போட்டியிடுவதே இதன் சிறப்பம்சம்.

குளவிக்கூட்டைக் கலைத்தால் என்ன நடைபெறுமோ அதனையே இப்போது சிங்கள மேடைகளில் காணமுடிகின்றது.

தனது அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்த ஒருவரே தனக்கு எதிராக பொது வேட்பாளராகப் போட்டியிடுவதை ஜீரணிக்க முடியாத ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, 'முட்டாள் எதனையோ காலில் மிதித்தால் என்னவோ செய்வது' போன்ற நிலைக்குத் தள்ளப்பட்டு அலட்ட ஆரம்பித்துள்ளார்.

தம்மிடம் பலரது கோவைகள் இருப்பதாகவும், அவைகள் மீது தாம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என்றும் அவர் விடுத்த எச்சரிக்கையே, குளவிக்கூட்டுக்கு வீசப்பட்ட முதற்கல்.

கட்சி மாறியவர்களின் ஊழலையே பூடகமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதனையிட்டு மைத்திரிபாலவோ அவருடன் கட்சி மாறியவர்களோ கிலேசமடைந்ததாகத் தெரியவில்லை.

மாறாக, அரசாங்கத் தரப்பிலுள்ள பலரது பெரிய கோவைகள் தங்களிடம் இருப்பதாக எதிரணியிடமிருந்து பதில் அறிவிப்பு வந்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சுனாமி நிதிச் சூறையாடலான 'ஹெல்ப்பிங்அம்பாந்தோட்டை', பிரதமர் டி.எம்.ஜெயரட்னவின் போதைப் பொருள் கடத்தல் போன்ற கோடானு கோடி ரூபாய் மோசடிகளையே எதிரணியின் அறிவிப்பு சுட்டியது.



இதுமட்டுமன்றி, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, பசில் சகோதரர்கள் தரப்பிலிருந்து ஆளும தரப்பின் சாதாரண பிரதேசசபை உறுப்பினர்கள் வரை ஒவ்வொருவரும் தனித்தனி ஊழல் ராஜ்யம் நடத்தி வந்ததை சிங்களவர்கள்கூட அறிவர்.

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக மகிந்த அமரவீர என்றொருவர் இருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்னர் இவர் ஒரு பொது நிகழ்வில் உரையாற்றுகையில், "எதிரணியினர் ஆட்சியைக் கைப்பற்றினால் இன்றைய ஊழலைவிட மோசமாக இடம்பெறும்" என்று கூறியது வம்பாகப் போய்விட்டது.

எதனை எப்படிச் சொல்வது என்பது தெரியாமல் சொன்னவர், இப்போது பெரும் விசாரணையைச் சந்தித்து தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மகிந்தானந்த அளுத்கமகே என்பவர் இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர். அங்குள்ள 'தெரன' தொலைக்காட்சியின் அரசியல் கேள்வி-பதில் நிகழ்ச்சியில் பங்குபற்றுகையில் நேயரொருவர் அலைவரிசையில் வந்து, "உங்களுடையதுதான் பெரிய கோவை (ஊழல்). இது உங்கள் மனைவிக்கே தெரியும்" என்று கூறி அமைச்சரை வாயடைக்கச் செய்தார்.

பாதிக்கப்பட்ட அமைச்சர் காவற்றுறையிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதனை மட்டுந்தான் இவரால் செய்ய முடியும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆதரித்துக் கூட்டங்களை ஏற்பாடு செய்வதில் அமைச்சர்களும் ஆளுந்தரப்பு உறுப்பினர்களும் பின்னடித்து வருகின்றனர்.

இதனால் சினமடைந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேரடியாக அவர்களை அழைத்துத் திட்டித் தீர்த்து வருகின்றார்.

இறுதியாகக் கட்சி தாவியவர் அமைச்சர் நவீன் திசநாயக்க. இவர் ஜே.ஆர். காலத்து பிரபல அமைச்சர் காமினி திசநாயக்கவின் புதல்வர்.

தாம் அரசிலிருந்து வெளியேறும்போது தம்மைத் தடுத்து நிறுத்த ஆளுந்தரப்பில் இருவர் பல கோடி ரூபாய்களை இலஞ்சம் தர முனைந்ததாக ஊடகங்களுக்கு இவர் பகிரங்கப்படுத்தியுள்ளார். இந்தத் தகவல் கொழும்பிலுள்ள பல தூதரகங்களைக் கண் விழிக்க வைத்துள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து எதிரணிக்குச் சென்ற முன்னாள் அமைச்சர் ராஜித சேனரட்னவின் பேருவளையிலுள்ள வீடு கொள்ளையடிக்கப்பட்டு அங்கிருந்த கணினிகளும் சில கோவைகளும் உட்பட பல பெறுமதியான பொருட்களை 'அரச இயந்திரம்' எடுத்துச் சென்றுளளது.

மகிந்த அரசில் அங்கம் வகிக்கும் வாசுதேவ நாணயக்காரவின் லங்கா சமசமாஜ கட்சியைச் சேர்ந்த ஆறு பிரமுகர்கள் எதிரணிக்குப் பாய்ந்துவிட்டனர் என்பது பிந்திய செய்தி.

சிங்கள தேசத்தில் இப்படியான பாய்ச்சல் காட்சிகள் நடந்துகொண்டிருக்கையில், மறு தரப்பில் தமிழர்களையும் அவர்களது அரசியல் போக்கையும் மையப்படுத்தி தனது வாக்குவங்கியை நிரப்பும் கைங்கரியங்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதற்கான பிரதான ஆயுதமான அரசாங்க ஊதுகுழலான 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் மும்மொழித் தினசரிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்தியுள்ள அணிக்கு, "ஐக்கிய தேசியக் கட்சி 10 விடுதலைப் புலிகள் 10 அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு (U.N... 10 L.T.T.E. 10 N.GO. Coalition) என்று இந்த ஊடகங்கள் பெயரிட்டுள்ளன.

பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ள எதிரணியில் எல்லாமாக முப்பத்தாறு அமைப்புகளும் அரசியற் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறவேயில்லை.

நிலைமை இப்படியிருக்க, அரச பரப்புரை திட்டமிட்டு தமிழர் மீது வன்முறையை மேற்கொள்ளக்கூடிய பேரினவாதப் போக்கை உருவாக்கி வருகின்றது.

சந்திரிகாவுடன் சம்பந்தன் இரகசிய ஒப்பந்தம் செய்துவிட்டதாகவும், ஆனால் இப்போதைக்கு இதனைப் பகிரங்கப்படுத்த வேண்டாமென்று சந்திரிகா கேட்டுள்ளதாகவும் ஒரு செய்தி.

தமிழர் தாயகத்திலிருந்து படைகளை விலத்தவும், வடமாகாண சபைக்கு காவற்றுறை அதிகாரம் வழங்கவும் எதிரணி கூட்டமைப்புக்கு உறுதியளித்துள்ளதாக இன்னொரு செய்தி.

ஆனால், மைத்திரிபால சிறிசேன தாமும் ஒரு பேரினவாதியே என்றும், தமிழருக்கு சமஸ்டிகூட வழங்கப்பட மாட்டாது என்றும் மேடைகளில் உணர்ச்சி பொங்க உரையாற்றி வருகின்றார்.

மகிந்தவுக்கும் மைத்திரிபாலவுக்குமிடையே பெரும் சிங்களப் பேரினவாதி யார் என்ற போட்டி ஆரம்பமாகிவிட்டது.

இதுவே சிங்கள வாக்குகளை அள்ளித் தருமென இருவரும் நம்புகின்றனர்.

இந்நிலையில் தமிழர் தரப்பு என்ன செய்யலாம்?

"சிங்கள ஜனாதிபதித் தேர்தலை, தமிழர் தேர்தலாக்க முடியாதா?" என்ற தலைப்பில் இதே பக்கத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் எழுதியிருந்தேன்.

அதே கருத்தையொட்டியதாக கொழும்பு ஊடகமொன்று ஆசிரியர் தலையங்கத்தையும், வேறு சில ஊடகங்கள் அரசியல் நோக்கர்களின் கருத்துகளையும் பின்னர் வெளியிட்டன.

சிங்கள ஜனாதிபதித் தேர்தலால் தமிழருக்கு எந்த நன்மையும் கிடையாது என்பதையும், தமிழரின் தனித்துவ அரசியல் தீர்வுக்கே தமிழரின் வாக்கு இருக்கும் என்பதையும் சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட இந்தத் தேர்தலை ஏன் பயன்படுத்தக் கூடாது?

தமிழர் தாயகத்தின் தலைமைத்துவத்தை இப்போது வைத்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு துணிந்து முடிவெடுக்க வேண்டிய நேரமிது.

-பனங்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது எதிரணிக்கு அரசிலிருந்து

# ரகசியமாக பலர் உதவி

### ராஜித எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த தலைமையின் கீழ் இயங்கும் அரசாங்கம் தற்போது ஆட்டம் கண்டுள்ளது. அரசிலிருந்து பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலகி வருகின்றனர். இந்நிலையில் அரசிலிருந்து விலகிக் கொள்ளாதவர்கள் கூட ரகசியமான முறையில் பொது எதிரணிக்கு ஆதரவை வழங்குவதோடு பலவித உதவிகளையும் புரிந்து வருகின்றனர் என முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த நேர்காணலில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவில் மற்றும் வெகுசன அமைப்புக்கள் பல எதிரணி பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளித்து வருகின்றன.

எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ள விரும்பும் பலரை அரசாங்கம் பல்வேறு வரப்பிரசாதங்களை வழங்கி தக்க வைத்துக் கொள்ளும் பலவீனமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த தோற்க வேண்டுமென்ற நோக்கில் எதிரணிக்கு பலர் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அண்மையில் கட்சி காரியாலய அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்று நடத்திய போது பாதுகாப்பு படை யினர் புகுந்து இடையூறு விளை வித்தனர்.

கட்சிக் காரியாலயத்தை கடுமையாக சோதனையிட்டனர். நாட்டின். பாதுகாப்பு குறித்து திருப்தி அடைய முடியாத நிலையில் உள்ளோம்.

சிறுவர் துஷ்பிரயோகம், படுகொலைகள், போதைப் பொருள் கடத்தல்கள் என குற்றச் செயல்களின் எண்ணிக்கை நீண்டு கொணடு செல்கின்றது.

போதைப் பொருள் கடத்தல்காரர்கள், எதனோல் கடத்தல்காரர்களை கைது செய்யாத பாதுகாப்பு தரப்பு எமது கட்சிக் காரியாலயத்தை சோதனையிட தீவிரம் காட்டுகின்றது.

ஆரம்பத்தில் எம்மை விமர்சனம் செய்த பலர் இன்று எம்முடன் இணைந்து கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வேட்பு மனுத் தாக்கலை முன்னிட்டு கொழும்பு நகரில் பலத்தபாதுகாப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்பதால் இன்று கொழும்பு நகரில் பாதுகாப்பை பலப்படுத்த பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் தினத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை தவிர கலக தடுப்பு பொலிஸாரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வன்முறைகளைக் கட்டுப்படுத்தவே பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஆஸி.நவுறு முகாமிற்கு பலவந்தமாக அகதிகளைக் கொண்டு செல்ல முயற்சி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் பேர்த் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளம் இலங்கைக் குடும்பம் ஒன்றை நவுறு தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடதத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் எட்டு மாதங்களுக்கு முன்னர் புகலிடம் தேடிய இலங்கையைச் சேர்ந்த இளம் தம்பதிகள் பின்னர் நவுறு தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு குழந்தை பிறக்கவிருந்த நிலையில், அவரகள் மீண்டும் பேர்த் தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களுக்கு இப்போது குழந்தை பிறந்து ஆறு மாதங்களான நிலையில், அவர்களை மீண்டும் நவுறு முகாமுக்கு அனுப்பி வைப்பதற்காக நேற்று முன்தினம் டார்வினில் உள்ள தடுப்பு நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களை டார்வினுக்கு அனுப்புவதற்காக விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது, அவர்கள் சென்ற வாகனத்தை மறித்து அவுஸ்திரேலிய அகதிகள் உரிமைக்கான நடவடிக்கை வலையமைப்பு போராட்டம் நடத்தியுள்ளது.



ஆயினும், அவுஸ்திரேலிய பொலிஸார் அவர்களை பலவந்தமாக இழுத்துச் சென்று அகற்றிய பின்னர், இவர்கள் விமானம் மூலம் டார்வினுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் உள்ளிட்ட 25 குடும்பத்தினரை அவுஸ்திரேலிய அரசு நவுறு தடுப்பு முகாமுக்கு அனுப்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதம் வரை எவரையும் நவுறு தடுப்பு முகாமுக்கு அனுப்பப் போவதில்லை என்று அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் அறிவித்துள்ளதால், இவர்கள் டார்வின் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-11)

## இன்று ஒரு தகவல்

### கொடுத்ததை வாங்கக் கூடாது

புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் மிதிலைப்பட்டி என்று ஒரு ஊர் இருந்தது.

அங்கே அழகிய சிற்றம்பலப் கவிராயர் என்ற ஒருவர் இருந்தார்.

ஒருநாள் அவர் கல்யாண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக இன்னொரு ஊருக்குச் சென்றார்.

கல்யாணம் முடிந்ததும் ஊருக்குத் திரும்ப ஆயத்தமானார். ஒரு இரவு முழுவதும் பயணம் செய்தால் தான் இவரது ஊருக்கு போகலாம்.

ஒரு வண்டியை வாடகைக்குப் பிடித்தார். வண்டிக்காரனைப் பார்த்து " எவ்வளவு வாடகை?"என்று கேட்டார்.

"மூன்று ரூபாய் வாடகை கொடுங்கள்! ஊருக்குப் போய்ச்சேரும் பொழுது விடிந்துவிடும். அதனால் நாளைக்கு காலையில் சாப்பாடு கொடுங்கள் அதுபோதும்" என்றான்.

சரி என்று ஒத்துக்கொண்டார்.

வண்டியும் புறப்பட்டது. கவிராயர் அதில் நன்றாக நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டார். நல்ல நிலா வெளிச்சம்.

வண்டிக்காரனும் ஆனந்தமாக தெம்மாங்கு பாடிக்கொண்டே போனான்.

கவிராயரும் சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டே போகிறார்.

வண்டிக்காரன் பாட்டை நிறுத்திவிட்டு மெதுவாக கவிராயரிடம் பேச்சுக் கொடுத்தான்.

"நீங்கள் யார்? உங்களைப்பற்றி கொஞ்சம் சொன்னால் நான் கேட்டுக் கொண்டே வருவேன்!" என்றான்.

கவிராயரும் தனது கதையை சொல்ல ஆரம்பித்தார்.

"நான் இருக்கிறது மிதிலைப்பட்டி தான். எங்கள் முன்னோர்களெல்லாம் பெரிய வித்துவான்கள்.

ஆரம்பத்தில் அவர்கள் சேலத்துக்குப் பக்கத்தில் ஒரு ஊரில் இருந்தார்கள்.

அந்த காலத்தில் இந்தப் பக்கத்தில் வெங்களப்ப நாயக்கர் என்ற ஜமீன்தார் இருந்தார்.

அவர்தான் மிதிலைப்பட்டி கிராமத்தை எங்களிடம் கொடுத்தார். இப்பொழுது எங்களுக்கு ஜீவாதாரமாக இருப்பது அதுதான். இன்றைக்கு கஷ்டமில்லாமல் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் வெங்களப்ப நாயக்கர் தான் என்று சொல்லிக் கொண்டு வந்தார்.

பொழுது விடிந்தது. மிதிலைப்பட்டி வந்து சேர்ந்தது கவிராயர் இறங்கினார்.

வீட்டு வேலைக்காரனைக் கூப்பிட்டு " வண்டிக்காரனுக்குப் பழையது கொண்டுவந்து கொடு" என்றார்.

அப்பொழுது வண்டிக்காரன் "ஐயா எனக்கு சாப்பாடு வேண்டாம். நான்போய் வருகிறேன். உத்தரவு கொடுங்கள்!" என்றான்.

" நீ ஊருக்குப் போய்ச் சேர்வதற்குள் ரொம்ப நேரமாகிவிடும் சாப்பிட்டுப் பொ! " என்றார்.

"எனக்குப் பசி இல்லை!" என்றான் அவன்.

"சரி..இந்தா வண்டி வாடகை!" என்று சொல்லி மூன்று ரூபாய் கொடுத்தார்.

"இது உங்களிடமே இருக்கட்டும். நான் வருகிறேன்" என்று கிளம்பினான் அவன்.

இன்னும் அதிகமாக வேண்டுமா?" என்றார் அவர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை! நீங்கள்தவறாக நினைக்க கூடாது!" என்று சொல்லிவிட்டு கம்பீரமாக கிளம்பினான் அவன்.

"என்ன காரணம் என்றாவது சொல்லி விட்டுப்போ!"என்றார் கவிராயர் அப்பொழுது தான் வண்டிக்காரன் சொன்னான்.

"ஐயா நேற்று ராத்திரி உங்கள் முன்னோர்களைப் பற்றி சொல்லிக் கொண்டு வந்தீர்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையிலே பிறந்தவன் தான், நான்!

ஏதோ என் தலைவிதி இப்பொழுது வண்டி ஓட்டிக்கொண்டிருக்கிறேன்! எங்கள் வீட்டுப் பெரியவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் என்ன தான் ஆனாலும் சரி... கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது!" என்று சொல்வார்கள். " எங்கள் முன்னோர்கள் உங்களுக்குக் கொடுத்ததிலிருந்து ஒரு சின்ன துரும்பைக் கூட திருப்பி வாங்குவதற்கு என் மனம் இடம் கொடுக்கவில்லை! மன்னித்துக் கொள்ளுங்கள்!

ஏதோ இந்த அளவுக்காவது நான் உங்களுக்கு உபயோகப்படுவது மாதிரி கடவுள் கருணை செய்தாரே! அது எனது பாக்கியம்!" என்று சொல்லிவிட்டு அந்த ஆள் போய்விட்டான்.

இது கற்பனைக் கதையில்லை! நிஜமாக நடந்தது! இந்த சம்பவத்தை அந்த கவிராயரே சொல்லியிருக்கிறார்.

இந்த குறிப்பை ஒரு புத்தகத்தில் பார்த்தேன்.

அதை என் நண்பரிடம் கொடுத்து படித்துவிட்டுக் கொடுங்கள் என்றேன்.

வாங்கியவர் திருப்பி அந்த புத்தகத்தை தரவேயில்லை ஒருநாள் "என்ன படித்து விட்டீர்களா?" என்றேன்.

"படித்துப் பார்த்தேன். வெங்களப்ப நாயக்கர் பரம்பரை மாதிரி நானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்றார்.

"என்ன அது? என்றேன்

" கொடுத்ததை திருப்பி வாங்கக்கூடாது என்பது அவர்களது கொள்கை. வாங்கியதை திருப்பிக் கொடுக்கக்கூடாது என்பது எனது கொள்கை!"என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள்



## நம்பிக்கையோடு வழிபாடு செய்தால் நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரும்! எவர் தடுத்தாலும் எடுத்த காரியத்தை முடிப்பதில் குறிக்கோளாக இருக்கும் சிம்ம இராசி நேயர்களே!

**40/100**

வரலாற்றுப் பொன்னேட்டில் இடம்பெறும் விதத்தில் வாழ்க்கை நடத்த விரும்பும் உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம வந்துவிட்டது. இதுவரை 3ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது 4ஆம் இடத்தில் சஞ்சரித்து எண்ணற்ற மாற்றங்களை வழங்கப் போகிறார். வரும் மாற்றங்கள்வளம்சேர்க்கும்மாற்றங்களாக அமைய வழிபாடுகள்தான் முக்கியத் தேவை. காரணம் அஷ்டமத்துச் சனியில் பாதிப்பங்கு வலிமை கொண்ட அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் அல்லவா நடைபெறப் போகிறது.

என்ன வந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. அஞ்சாது நெஞ்சம் படைத்த. உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனி வரும்பொழுது கொஞ்சம் மன நிம்மதி குறையத்தான் செய்யும். அதன்பிறகு சனிப் பெயர்ச்சியாகி சரி பாதி காலம் முடிவடையும் நிலை உருவாகிறது. பிருகுசனி பாம்பிரண்டும் பிற்பாதி நற்பலனே! என்ற வரிகளுக்கு ஏற்ப வளர்ச்சியில் சிறுசிறு தடைகளை கொடுககுமே தவிர முன்னேற்றத்தில் எந்த முட்டுக்கட்டையும் ஏற்படுத்தாது. உங்கள் ராசியைப் பொறுத்தவரை 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குபவர் சனிபகவான.

வியாதிகள் ஸ்தானாதிபதி சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது அடிக்கடி உடல் நிலைத் தொல்லைகள் வந்துகொண்டேயிருக்கும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராகும்.

விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சனி, விருத்தியம்சத்தை கொடுப்பவர். ஆயுள் காரகன் என்பதால் ஆயுளை விருத்தி செய்வதில் வல்லவர். அதே நேரத்தில் எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் மூன்று இடத்திற்கும் ஆதிபத்யம் கொண்ட சனியால் பிரச்சினைகள் வராமலிருக்க, உங்கள் சுய ஜாதகத்தில் சனி இருக்கும் நிலையறிந்து, அதைப் பார்க்கும் கிரகம், அதோடு சேர்ந்த கிரகம், நவாம்ச நிலை அனைத்தையும் அறிந்து யோகபலம் பெற்றிருக்கும் நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து முறை யான பரிகாரங்களைச் செய்து வழிபட்டால் தான் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும்.

## நம்பிக்கையோடு வழிபாடு செய்தால் நல்ல மாற்றங்கள் இல்லம் தேடிவரும்!

அதுமட்டுமல்லாமல் 2 இல் ராகுவும், 8இல் கேதுவும் சனிப்பெயர்ச்சி சமயத்தில் சஞ்சரிக்கிறார்கள். சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கம் வலிமையாக இருப்பதால் சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் உங்கள் ஜாதகம் அமைகிறது. எனவே, ஏற்றமும், இறக்கமும் வந்துகொண்டேயிருக்கும். எனவே, உங்களுக்கு அனுகூலம்பெற வைக்கும் நாள, நேரம் பார்த்து, முறையாக சர்ப்ப சாந்திப பரிகாரங்களைச் செய்தால் முன்னேற்றத்தின் முதல் படிக்கு செல்லலாம்.

### சுபிட்சத்தை வழங்குமா சுகஸ்தான சனி!

சனி பகவான், இதுவரை உங்களுக்கு மூனறாமிடத்தில் சஞ்சரித்து பல தடைகளைக் கொடுத்திருப்பார். என்ன இருந்தாலும் வெற்றி ஸ்தானத்தில் உச்சம் பெற்ற சனி உங்களுக்கு வெற்றியையும், கொடுத்திருப்பார். கடைசி நேரத்தில் வேதனைகளையும் தந்திருப்பார். இனி நீங்கள் எடுத்த முயற்சிகளை வெற்றி பெற வைக்கப் போகின்றது இந்த சனிப்பெயர்ச்சி. சனி சுக ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும், பெயர்ச்சியான சில நாட்களிலேயே குரு வக்ர கதியில் கடக ராசிக்கு சென்று உச்சம் பெற்ற நிலையில் அந்தச் சனியைப் பார்க்கப்போகிறார்.

சுகங் களையும், சந்தோஷங்களையும் வழங்கும் இடத்தை உச்ச குரு பார்க்கும் பொழுது, நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. ஆச்சரியப்படும் விதத்தில் உயரப் போகின்றது. குழப்பங்களிலருந்து விடுபடுவீர்கள். கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். படிப்படியாக முன்னேற்றங்கள் வந்து பரவசப்படுத்தப் போகின்றது. மார்கழி 1 ஆம திகதி முதல், உங்கள் மனதில் இடம்பெற்ற இனம் புரியாத கவலை அகலும். கட்டடம் அல்லது மனை வாங்கும் முயற்சியிலருந்த தடை விலகும்.

### மந்தனின் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!

உங்கள் ராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். அவர் உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து அதன் பார்வை உங்கள் ராசியிலும், 6, 10 ஆகிய இடங்களிலும் செலுத்துகிறார். எனவே, அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. எதிரிகள் ஸ்தானத்தை எதிரிகள் ஸ்தானாதிபதி பார்ப்பது யோகம் தான். உங்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் ஏராளமாக இருக்கும். வெளியில் அப்படி, இப்படி என்று பேசுபவர்களெல்லாம் உங்களைப் பார்த்தால் சரணடைந்து விடுவார்கள். இதுதான் உங்கள் வெற்றியின் ரகசியம். சமயம் வரும்போது சர்தனை நிகழ்த்துவீர்கள்.




சனி பார்வை சாதாரண பார்வையல்ல, கடுமையான பார்வைதான். ஆனால் இந்த முறை சனிப்பெயர்ச்சியாகின்ற பொழுது குரு பார்த்த சனியாக விளங்குகிறது. எனவே, குருபார்வை பலத்தால் உடல் நலம் ஒத்துழைக்கும். உள்ளத்தில் உள்ள மனக்கசப்பு மாறும்.



சிலர் விருப்ப ஓய்வு பெற்று சுய தொழில் செய்ய முன்வருவர். அப்படி தொழில் தொடங்க நினைப்பவர்கள் குடுமப உறுப்பினர்களில் தொழில் ஸ்தானம் யாருக்கு வலுவாக இருக்கிறதோ, அவர்கள் பெயரில் தொடங்குவதே நல்லது. பெரியளவில் தொழில் நிலையம் நடத்துபவர்கள் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு, புதிய கூட்டாளிகளை இணைத்துக்கொள்ள முன்வருவர்.

யோகபலம் பெற்ற நட்சத்திரம், உங்கள் ராசிநாதனுக்குரிய கிழமையோடு இணையும் நாளில், சிறப்பு வழிபாடுகளைத் தேர்ந்தெடுத்தால் பரபரப்பான சூழ்நிலை மாறும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் உயரும். தக்க விதத்தில் முன்னேற்றமும் வந்து சேரும்.

### குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி காலம்!

விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறப் போகின்றது. 5.7.2015இல் சிம்மத்திலும், 2.8.2016இல் கன்னி ராசியிலும், 2.9.2017இல் துலாம் ராசியிலும் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

சிம்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை உங்கள் ராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். ஆர்வத்தோடு செய்யும் பணிகளில் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகள் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனுகூலமாக இருக்கும்.

கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கும்பொழுது, அதன் பார்வை 6, 8, 9 ஆகிய இடங்களில் பதிவதால் உடலாரோக்கியம் சீராகும். கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும். இடமாறச் சிந்தனை மேலோங்கும். இழப்புகளை ஈடுசெய்ய புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள். புதிய தொழில் தொடங்க முயற்சி செய்தவர்களுக்கு உங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். துலாம் ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் ராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே பிரிந்த தம்பதியர் வந்திணையும் வாய்ப்பு உருவாகும். பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். இழந்த சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். ஈடு இணையற்ற வாழ்க்கை கைவரப் பெறுவீர்கள். அந்நிய தேசப் பயணம் எண்ணியபடி கைகூடும். புகழ்கூடும். பொருளாதார நிலை உயரும்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

8.1.2016 இல் சிம்மத்தில் ராகுவும், கும்பத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். அப்பொழுது சர்ப்பதோஷம் உங்களை அதிகமாகவே ஆட்கொள்ளும். பொதுவாக அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கமாக இருந்தாலும் சரி, ஜென்ம ராகுவின், சப்தம கேதுவின் ஆதிக்கமாக இருந்தாலும் சரி.. இடமாற்றம், வீடுமாற்றம் செய்வதன் மூலம் இன்னல்களிலருந்தும், பாதிப்புகளிலருந்தும் விடுபட இயலும்.

எனவே, வீடுமாற்றங்கள், இடமாற்றங்கள் வெற்றிக்குரிய விதத்தில் அமையும். அதற்கு முன்னதாக சர்ப்ப சாந்தி பரிகாரங்களை நீங்கள் தகுந்த நாள் பார்த்து செய்ய வேண்டும்.

27.7.2017 இல் கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 6இல் கேது சஞ்சரிக்கும் பொழுது எதிரிகள் விலகவும், எதிர்பார்ப்புகள் நிறைவேறவும் வார வழிபாடாக மேற்குப் பார்த்த

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

துரக்கையை வழிபடுவது நல்லது. நிகழ் காலத் தேவைகள் பூர்த்தியாகும். நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது மூன்று முறை வக்ரம் பெறுகிறார். 2015, 2016, 2017 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் வக்ரம் பெறும் பொழுது எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும்.

குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் அகலும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வாய்தாக்கள் ஓயும். கலக்கம் அகன்று கனிவான வாழ்க்கை அமையும். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதே என்று ஆச்சரியப்படுவீர்கள். வெளிநாட்டு முயற்சி கைகூடும். தொழில்வளம் சிறப்பாக இருக்கும். சோதனைகளை வென்று சாதனை படைப்பீர்கள்.

### தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!

சிவாலயத்திற்கு சென்று அருகம்புல் மாலை சூட்டி ஆனைமுகப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். அதன்பிறகு சனிபகவான் சன்னிதியில் எள்தீபம் ஏற்றுங்கள். கனவுகளை நனவாக்கும் கற்பக விநாயகரை வழிபட்டு நவக்கிரகங்களையும் வழிபட்டு வாருங்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

*-நாளை கன்னி-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை எதிர்த்து கறுப்புக்கொடி போர்

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருவதை எதிர்த்தும் அனுமதித்த இந்தியப் பேரரசைக் கண்டித்தும் திருப்பதியில் நாளை 9 ஆம் திகதி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் மாபெரும் கண்டன கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் நடைபெறும் என்று தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

மகிந்தராஜபக்ஷவைநாளை திருபபதிக்கு வர இந்தியப் பேரரசு அனுமதித்திருப்பது மிகவும் வன் மையாகக் கண்டிக்கத்தக் கது. இனப்படுகொலைக்கு எதி ராக ஐக்கிய நாடுகள் சபை விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணையை ஏற்க முடியாது என்றும் அந்தக் குழுவை அனுமதிக்க முடியாது என்றும் இல ங்கை அரசு மறுத்து வருகிறது.

இதனால் இந்தியா உட பட உலகம் முழுவதும் இல ங்கை இனப்படுகொலையின் அழியாத சாட்சியங்களாக இருக்கிற தமிழீழ உறவுக ளிடம் ஐக்கிய நாடுகள் அவை யத்தின மனித உரிமைகள் ஆணையம் விசாரணை நடத்த வேணடும் என்று ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகம் வலியுறுத்தி வருகிறது.

## வாழ்வுரிமைக் கட்சி ஏற்பாடு

அத்துடன் ஐக்கிய நாடுகள அவைய விசாரணைக்குழு இந்தயாவர அனுமதிக்கவேண டும் என்றும் இந்திய மத்திய அரசை ஒட்டுமொத்த தமிழ் நாடும் வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் மகிந் தவை இந்தியாவுக்குள் வர அனுமதிப்பதும் நாளை திருப் பதியில் மகிந்தவுக்கு செங் கம்பளம் விரிப்பதும் தமிழர் நெஞ்சங்களை கொந்தளிக்க வைக்கிறது.

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தோற்று விடுவோம். தாம் சர்வதேச நீதி மன்றத்தின் முன்பு போர்க் குற்றவாளியாக நிறுத்தப்பட்டுவோம் என்று வெளிப்படையாக அஞ்சி அலறும் வகையில் ஒட்டுமொத்த சொந்த சிங்கள தேசமே ராஜபக்ஷவுக்கு எதிராக போர்க்கோலம் பூண்டிருக்கிறது. அதுவும் மகிந்தவின் சொந்த கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையினரே குடும்ப கொடுங்கோல் ஆட்சியை சகிக்க முடியாமல் கட்சியை விட்டு வெளியேறியிருக்கின்றனர்.

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் 35 அரசியல் கட்சிகளின் பொதுவேட்பாளராக நேற்று வரை மகிந்த அரசின் அமைசசராக இருந்த மைத்திரிபால சிறிசேனாவை நிறுத்தும் அளவுக்கு தன் சொந்த இன மக்கள்மீது அடக்கு முறை ஏவி விடப்பட்டிருக்கிறது எனில் அப்பாவி ஈழத் தமிழர்களின் கதி என்ன என்பதை இந்தியப் பேரரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலக நாடுகள் ஏற்றுக் கொண்டிருக்கிற இந்தியா அங்கமாக இருக்கிற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவைத்தான் இந்தியப் பேரரசு அனுமதிக்க வேணடுமே தவிர இத்தகைய மகிந்தவை ஒருபோதும் இந்தியாவுக்குள் வர அனுமதிக்கவே கூடாது.

தமிழர்களின்எதிர்ப்பையும் மீறி மகிந்த ராஜபக்ஷவை திருபபதிக்கு மட்டுமல்ல இந்தியாவின் எந்த ஒரு பகுதிக்கும் அனுமதிக்கக் கூடாது என அவர் மேலும்தெரிவித்துள்ளார். (இ-5)

## ஈழக் கனவை நனவாக்க தமிழர் துடிக்கின்றனராம்

### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



தமிழ் புலம் பெயர் அமைப்புக்களும் தமிழர்களும் ஈழக் கனவை நனவாக்க கங்கணம் கட்டிக் கொண்டு துடித்துக் கொண்டு இருக்கிறனர் எனத் தெரிவித்த அமைச்சர் மகிந்த யாப்பா அபேயவர்தன சிறுபான்மை மக்களின் வாக்குகளோ அல்லது ஆதரவோ எமது ஜனாதிபதிக்கு தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரத்தை கொண்டே யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்தோம்.

தமிழ் புலம்பெயர் அமைபபுக்கள் ஈழ கனவை நனவாககக் கங்கணம் கட்டி கொண்டு இருக்கின்றது.

வெளிநாட்டு சக்திகளும் ஊடுருவப்பார்க்கின்றது. இதற்கு உதாரணமே வட மாகாண சபையில் செங்கோல் வீசி எறியப்பட்டது. யுத்தம் முடிந்தாலும் பிரச்சினைகள் தீரவில்லை.

ஆகவே நிறைவேற்றுஅதிகார முறையை உடனடியாக நீக்கமுடியாது மக்களின் தேவைகளை நாம் நிறை வேற்றியுள்ளோம்.

சிறுபான்மை மக்களோ அல்லது அவர்களின் அரசியல் கட்சிகளின் ஆதரவோ எமக்கு தேவையில்லை. அவர் கள ஆதரவின்றி எம்மால் வெற்றி பெறமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மைத்திரிக்கு ஆதரவு

கோடிகாவத்தை - முல்லேரியா பிரதேசசபை தலைவர் பிரசன்ன சோலங்க ஆராச்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளார். நேற்றுக் காலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட சில விடயங்களால் தான் அதிருப்தி அடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டே மைத்திரிபாலவுக்கு ஆதரவளிக்கப் போவதாக கூறிய அவர், ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போவதில்லை எனவும் தெரிவித்தார். (இ-5)

## இந்திய ஜனநாயகத்தை தகர்க்க பாகிஸ்தான் முயற்சித்து வருகிறது

### பிரதமர் மோடி தாக்கு



ஜம்மு-காஷ்மீரில் நடைபெற்றுள்ள தாக்குதல், இந்திய ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட வெட்கக்கேடான தாக்குதல் என்று கூறி, பாகிஸ்தானை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மறைமுகமாகச் சாடினார். ஜம்மு-காஷ்மீரில் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கரவாதி கள் நடத்திய தாக்குதலைக் கண்டிக்கும் விதமாக அவர் இதைத் தெரிவித்தார்.

ஜார்க்கண்ட் மாநிலம், ஹஸாரிபாகில் நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பாகிஸ்தான் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல், மோடி பேசியதாவது,

இந்திய ஜனநாயகத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்காக வெட்கக்கேடான முறையில் பயங்கரவாதிகள் முயறசிமேற்கொண்டனர். ஆனால், துணிச்சல்மிக்க நமது வீரர்கள் நாட்டைப் பாதுகாக்க தங்கள் உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

இத்தாக்குதலில் உயிரிழந்த ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் சங்கல்ப் குமார் சுக்லா உள்ளிட்ட ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன்.


இந்த மாநிலத்தின் வருங்காலச் சந்ததியினர் சங்கல்ப் குமார் உள்ளிட்ட வீரர்களின் தியாகத்தைநினைவில்கொள்ள வேண்டும். ஜம்மு-காஷ்மீரில் நடந்து முடிந்த இரண்டு கட்ட வாக்குப்பதிவுகளில் வாக்கு எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பயங்கரவாதிகள் இந்த கோழைத்தனமான தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். தீவிரவாதிகளின் இத்தாக்குதலை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம்.

இதற்குத் தகுந்த பதிலடி கொடுப்போம். காஷ்மீர் மக்கள் ஜனநாயகத்தின் மீதும், ஜனநாயக அமைப்பின்மீதும நம்பிக்கை வைத்துள்ளது வாக்கு சதவீதத்தின் அடிப்படையில் நிரூபணமாகியுள்ளது.

அவர்கள் பிரிவினை வாதத்தை விரும்பவில்லை. காஷ்மீர தாக்குதலில் வீர மரணம் அடைந்தவர்களை இந்தியா மறக்காது.

தேசத்துக்காக எப்போதும் தியாகம் செய்யக்கூடிய ஜார்க்கண்ட் மாநில மக்கள், காஷ்மீர தாக்குதலில் உயிரிழந்தவர்களின் தியாகத்தை ஒவ் வோர் ஆண்டும்இதே நாளில் நினைவுகூர வேண்டும் என அவர் மேலும் தெரிவித் தார்.(இ-5)





யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## கைதடி குடும்ப முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் கௌரவிப்பு விழா

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையமும் கைதடி குடுமபமுன்பள்ளிகளும்இணைந்து நடத்தும் கௌரவிப்பு விழா நேற்று பிற்பகல் 2 மணிக்கு கைதடி சந்தி விநாயகர் மணடபத்தில்நடைபெற்றது.

சனசமூக நிலையத் தலைவர் லயன்.ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி நூல் வழங்கலும் 5 ஆம் தர புல மைப பரிசில வெற்றியாளருக்குமான கௌரவிப்பும் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக லயன்ஸ் கழக உதவி ஆளுநர் லயன். டாக்டர்.வை.தியாகராசா , தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்கள பணிப்பாளர் த.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர் வேஸ் வரன், சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் லயன். க.சுதரசன்,கைதடி லயன்ஸ் கழக தலைவர் லயன். து.மகேந்திரன் ,லயன் சீமாட்டி நிர்மலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


கௌரவ விருந்தினர்களாக சாரங்கா நகைமாட அதிபர் லயன். ப.சிவபாஸ்கரன,திரு.திருமதி. சுப்பையா பூமாதேவி தம்பதியர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட விருந்தினராக ஓய்வு நிலை கல்விபணிப்பாளர்திருமதி அருளேஸ்வரி வேதநாய கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளில்லா விமானத் தாக்குதலில் சிக்கி பாகிஸ்தானில் ஐவர் உடல் சிதறிப்பலி!

### அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர்கள் என இனங்காணப்பட்டுள்ளது



பாகிஸ்தான் ரஷ்யா உள்ளிட்ட நாடுகளினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்த அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களின் தாக்குதல் நடவடிக்கையின் மூலம் அல்கொய்தா தீவிரவாதிகள் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளமை அமெரிக்காவிற்கு சர்வதேச ரீதியாக பெரும் வரவேற்பை அளித்துள்ளது.

ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும் என ஐ.நா சபையில் பாகிஸ்தான் கோரிக்கை விடுத்திருந்தது.

பாகிஸ்தானின வடக்கு வஷிரிஸ்தான் பிராந்தியத்தில் அமெரிக்க படைகள் மேற்கொண்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவர் உட்பட ஐந்து போராளிகள் நேற்று முன்தினம் கொல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அப்பிராந்தியத்திலுள்ள தத்தாகேல் பகுதியில் உள்ள கார்தன்கி எனும் இடத்தில் நடத்தப்பட்ட தாக்குதலி லேயே இவர்கள ஐவரும் கொல்லப்பட்டுள்ளனர்.


இந்த பிரதேசத்தில் கடந்த ஜூன் மாதம் முதல், தலிபான் மற்றும் அல் கொய்தா அமைபபுடன் தொடர்புடைய தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவத்தினர் யுத்தம் செய்து வருகின்றனர்.

ஒரு ஏவுகணை தாக்குதலில் இந்த ஐந்து பேரும் கொல்லபபட்டதாக அங்குள்ள பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் அல்கொய்தா அமைப்பின் செய்தி தொடர்பாளராக பணியாற்றிய உமர் பாறுக் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உமர் உஷாத் அல்லது உமர் பாறுக் என அழைக்கப்படுபவர் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் அல்கொய்தா அமைப்பின்தலைவர்க ளுடன பணியாற்றியவர் என அறியப்பட்டுள்ளது. (இ-5)

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் அதிர்ச்சியூட்டும் வீடியோ வெளியீடு



சிரியாவில் டெயிர் எஸோர இராணுவ விமான நிலையத்துக்கு அருகிலுள்ள அரசாங்க தளமொன்றின் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் அங்கு தம்மால் பிடிக கப்பட்டபடையினருக்குதலையை துண்டித்து மரண தண்டனை நிறை வேற்றியுள்ளனர்.

தலை துண்டிக்கப்படும் முன்னர் படைவீரர்கள் தமது உயிருக்காக போராளிகளிடம் கெஞ்சுவதையும் தீவிரவாதிகள் படைவீரர்களுக்கு தலையை துண்டித்து மரண தண்டனையை நிறைவேற்றுவதையும் வெளிப்படுத்தும் வீடியோ காட்சியொன்று ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளால் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் போர் விமானமொன்றை சுட்டு வீழ்த்துவதை வெளிப்படுத்தும் வீடியோ காட்சியும் வெளியிடப்பட்டுள்ளது. (இ-5)

## 7 தீவிரவாதிகளுக்கு தூக்குத் தண்டனை

எகிப்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி முகமது முர்சிக்கு ஆதரவாக கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் போராட்டம் நடந்தது. அவரை பதவியில் அமர்த்தும்படி ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

முர்சிக்கு அதெல் ஹபாரா என்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளும் ஆதரவாக போராட்டம் நடத்தினர். அப்போது இஸ்ரேல் எல்லையில் சினாய் என்ற இடத்தில் நடத்திய தாக்குதலில் 25 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை கெய்ரோ நீதிமன்றில் நடந்து வந்தது. அதில் முக்கிய தீவிரவாதிகள் 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் தவிர மேலும் 25 பேருக்கு தண்டனைகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு 15 ஆண்டு முதல் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்பட்டது.(இ-5)




## வறுமையில் வாடும் 9.25 கோடி மக்கள்

### சீனாவில் மட்டும்

(பீஜிங்)

உலக மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கும் நாடு சீனா. தற்போது அது பல துறைகளில் முன்னேறி வருகிறது. வளர்ச்சி திட்டங்கள் நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அதே நேரத்தில் அங்கு வறுமையால் வாடும் மக்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் சீனாவில் வறுமையால் வாடும் பகுதிகள் மற்றும் மக்கள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் கிராமங்கள் வறுமையில் சிக்கி தவிப்பது தெரய வந்தது. அங்கு வாழும் 9 கோடியே 20 இலட்சம் மக்கள் வறுமையில் வாடுகின்றனர்.

இந்த தகவலை வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி துறையின் தலைவர் லியூ யங்பூ தெரிவித்துள்ளார். இருந்தும் சீனாவில் வறுமையில் வாழும் மக்களின் நிலை மறைக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. (இ-5)

## மலேசியர்கள் விமான நிறுவனத்தை நிர்வகிக்கத் தெரியாத முட்டாள்கள்

### முன்னாள் பிரதமர்

(கோலாலம்பூர்)

மலேசியர்கள் விமான நிறுவனத்தை நிர்வகிக்க முடியாத முட்டாள்கள் என அந்நாட்டின் முன்னாள் பிரதமர் மகாதிர் முகமது தெரிவித்துள்ளார்.

மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் புதிய சி.இ.ஓ. வாக ஜேர்மனியைச் சேர்ந்த கிறிஸ்டோப் ஆர். முல்லர் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.


முல்லர் அடுத்த ஆண்டு பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலையில் இது குறித்து முன்னாள் மலேசிய பிரதமர் மகாதிர் முகமது கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி கூறுகையில், மலேசியர்கள் முட்டாள்கள், அவர்களுக்கு விமான நிறுவனத்தை நிர்வகிக்க தெரியவில்லை என்றும் இழப்பு ஏற்பட்ட பிறகு தற்போது அதை சரி செய்ய நினைக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன் மலேசியன் ஏர்லைன்ஸ விமானம் எம்.எச். 370 மாயமானது, உக்ரைனில் எம்.எச்.17 ஏவுகணை வீசித் தாக்கப்பட்டது ஆகியவற்றால் அந்நிறுவ னத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் அரசுக்கு சொந்தமான கசானா நஷனல் பெர்ஹாதுக்கு 70 சதவீத பங்குகள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஒரு இதயத்துடன் மட்டும் ஒட்டிப்பிறந்த குழந்தைகள்



அட்லாண்டாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை ராபின்- மைக்கேல் என்ற தம்பதிக்கு பிரிக்க முடியாத ஒட்டிப்பிறந்த இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தது. இந்த குழந்தைகள் ஒரே கைகள், கால்கள் மற்றும் உடல் என ஒட்டிப்பிறந்த இரட்டை குழந்தை ஆகும். பிறந்த போது 9 பவுண்டுகள், 10 அவுன்ஸ் எடையுடன் இருந்த இந்த இரட்டை குழந்தைகளை பிரிக்க முடியாது.

தற்போது நலமாக உள்ள இந்த குழந்தைகளுக்கு ஒரே இதயம், மூன்று நுரையீரல்கள் உள்ளன. மேலும் மூன்றாவது நுரையீரல் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. இந்த குழந்தைகளுக்கு ஆஷா மற்றும் எலி ஹாம்பே என பெயர் சூட்டப்பட்டுள்ளது. (இ-5)

### அமெ. இராணுவத்தில் பாலியல் தாக்குதல்கள்

அமெரிக்க இராணுவத்தில் பாலியல் தாக்குதல்கள் இந்த வருடம் 8 சதவீதத்தால் அதிகரித்து 5ஆயிரத்து 983 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் சுமார் மூன்றில் இரு பகுதியினர் தாம் பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் சுமார் 19 ஆயிரம் பேர் தாம் விரும்ப த்தகாத பாலியல் தொடர்பை அனுபவிக்க நேர்ந்ததாக தெரிவித்துள்ளனர். அவர்களில் 10 ஆயிரத்து 500 பேர் ஆண்களாவர். 8 ஆயிரத்து 500 பேர் பெண்களாவர்.

தமக்கு நேர்ந்த பாலியல் ரீதியான தாக்குதல் குறித்து முறைப்பாடு செய்தமைக்காக தாம் பழிவாங்குதலை எதிர்கொள்ள நேர்ந்ததாக பாதிக்கப்பட்ட பெண்களில் 62 சதவீதமானவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## பிணைக் கைதி சுட்டுக்கொலை

### ஒபாமா கண்டனம்

ஏமனில் பிடித்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க பிணைக் கைதி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தென் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் பலியாகியுள்ளார்.

**அமெரிக்க பிணைக்கைதி**

அமெரிக்க புகைப்பட பத்திரிகையாளரான லூக் சோமர்ஸ் (வயது 33), ஏமன் நாட்டின் தலைநகர் சானாவில் வைத்து கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி அல்கொய்தா தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார். இதே போன்று தென் ஆபிரிக்காவை சேர்ந்த ஆசிரியர் பியரே கொர்கி என்பவரும் பிணைக்கை தியாக பிடித்துச் செல்லப்பட்டார்.

3 நாளில் அமெரிக்கா கோரிக்கைகளை நிறைவேறறாவிட்டால் பிணைக்கைதிகளை கொலை செய்யப் போவதாக அல்கொய்தா தீவிரவாதிகள் சில தினங்களுக்கு முன்பு மிரட்டல் வீடியோ வெளியிட்டிருந்தனர். இந் நிலையில் நேற்று கெடு முடியும் நாள் ஆகும்.

**மீட்பு முயற்சி தோல்வி**

ஏமனில், ஷாப்வா பகுதியில் அவர்களை மீட்கும் முயற்சியில் தாக்குதல் தொடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டார். இதையடுத்து அமெரிக்கா மற்றும் ஏமன் தனிப்படைகள் நேற்று முன்தினம் தாக்கு தல நடத்தின.

ஆனால் இந்த மீட்பு முயறசி தோல்வி அடைந்தது.

**2 பேரும் சுட்டுக்கொலை**

லூக் சோமர்ஸ், பியரே கொர்கி ஆகிய இருவரையும் அல்கொய்தா தீவிரவாதிகள் சுட்டுக்கொலை செய்துவிட்டனர்.

இந்த படுகொலைக்கு ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், "இது கொடூரக்கொலை" எனகூறினார்.

தென் ஆபிரிக்க ஆசிரியர் பியரே கொர்கியை அவரது மனைவி யோலண்டேயுடன்தான் கடந்த ஆண்டு மே மாதம் தீவிரவாதிகள் பிடித்து வைத்திருந்தனர். ஆனால் யோலண்டேயை சென்ற ஜனவரி மாதம் விடுவித்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை கைவிடுமாறு கோரி மகஜர்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் வழங்கப்படுகின்ற தலைமைத்துவ பயிற்சிக்கு எதிராக அப்பயிற்சியினை உடனடியாக கைவிடுமாறு அழுத்தம் கொடுக்கும் வகையில் பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கம் மகஜர் ஒன்றினை கையளிப்பதற்காக மாணவர்களிடம் கையெழுத்துக்களை சேகரிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு கையெழுத்து சேகரித்த பின்னர் இம்மகஜர் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவிடமும் உயர்கல்வி அமைச்சு அதிகாரிகளிடமும் கையளிக்கவுள்ளதாக மாணவர் சங்கச் செயலாளர் குலதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சி வழங்குவதாக தெரிவித்து அங்கு முழுமையாக இராணுவ நிர்வாக பயிற்சி நடைபெறுகின்றது. இது மாணவர்கள் ஏமாற்றப்படுவதுடன் பெற்றோர்களும் எவ்வித பயனும் கிடையாது இதன் பொருட்டு மக்கள் பணமும் பெருமளவு விரயமாகின்றது. இப்பயிற்சிகளின் போது பல மாணவர்கள் காயமடைந்துள்ளனர். மாணவர்களின் மனநிலையும் பாதிக்கப்படுகிறது.

எனவே இதனை நாம் கடுமையாக கண்டிப்பதுடன் இத்திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என வலுயுறுத்துவதாகவும் மாணவர் சங்க செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அங்கவீனமான படையினரால் அலரிமாளிகை முற்றுகை

போரில் அங்கவீனமான இராணுவத்தினர் அலரி மாளிகையை நேற்று முன்தினம் முற்றுகையிட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அங்கவீனமான சுமார் 300 இராணுவத்தினர் இவ்வாறு அலரி மாளிகையை முற்றுகையிட்டுள்ளனர். அரசாங்கம் தமது கோரிக்கைகளை புறந்தள்ளி விட்டு செயற்பட்டதாகவும் இரத்துச் செய்யப்பட்ட அங்கவீனமான இராணுவத்தினர் உட்பட அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை வழங்குமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அங்கவீனமான இராணுவ அதிகாரிகள் சங்கத்தின் பொருளாளரும் கொமாண்டோ படையணியின் அதிகாரியுமான டி.எம்.பி.பீ. திஸாநாயக்க தெரிவிக்கையில்,

அங்கவீமான இராணுவத்தினரான எமக்கு கடந்த 22 வருடங்களாக கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அங்கவீமான இராணுவத்தினரில் இரண்டு கண்களிலும் பார்வையிழந்த படையினரும் உள்ளனர்.

அரசாங்கம் என்ன கூறினாலும் எமக்கு இதுவரை எந்த நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

அத்துடன் அங்கவீனமான எங்களது கொடுப்பனவு இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தவிர ஏனைய அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்திய போது எந்த பயனும் ஏற்படவில்லை.

ஜனாதிபதிக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இரண்டு வருடங்களின் பின்னர் பதில் வந்தது. ஜனாதிபதிக்கு பணிச் சுமை அதிகம் என்பதால், பாதுகாப்புச் செயலாளரிடம் முறையிடுமாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவரிடம் கூறியும் பயனில்லாமல் போனது. இதனால் இறுதியாக இந்தப் பிரச்சினைக்கு பதிலை எதிர்பார்த்து நாங்கள் இங்கு வந்துள்ளோம் என திஸாநாயக்க தெரிவித்தார். (செ-11)

# புனித பாப்பரசரின் விஜயத்தினை முன்னிட்டு சிறைக்கைதிகள் சிலருக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு சிறைக்கைதிகள், சிலருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நோய்வாய்ப்பட்டவர்கள், நல்லொழுக்கமானவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் ஆகிய அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டிய கைதிகளை தெரிவு செய்யும் நடவடிக்கை சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் வழிகாட்டல்களுக்கு அமைய மேற்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சின் செயலாளர் ஜீ.எஸ். விதான கைதிகளின் பட்டியலை தயாரித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த பட்டியலுக்கு ஜனாதிபதியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

பாப்பரசரை கௌரவப்படுத்தும் நோக்கில் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-5)

# ஆட்சியாளர்களை விரட்டியடிக்க வேண்டும்

நாட்டின் வளங்களையும் மக்களையும் யார் ஏகாதிபத்தியவாதிகளிடம் பலி கொடுத்துள்ளனர் என்பது நாட்டு மக்களுக்கு தெளிவாகியுள்ளதாக நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நாட்டின் தேசப்பற்றுள்ளவர்கள் அனைவரும் மைத்திரி பாலவுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குலக ஏகாதிபத்தியம் தனக்கு எதிராக செயற்பட தொடங்கியிருப்பதாக மகிந்த கூறுகிறார். முட்டாள்தனமாக இதனை கூறுகிறாரா அல்லது வேண்டுமென்றே கூறுகிறாரா என்பது தனக்கு தெளிவில்லை எனவும் விக்ரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலயத்தில் 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர் கலைச்செல்வி மதியழகன் அவர்களையும் இணைந்து உதவிய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை- 2014
கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்



இடமிருந்து வலமாக:- திருமதி கலைச் செல்வி மதியழகன் , திருமதி சாந்தினி விஜயேந்திரன் (பிரதி அதிபர்), திரு கெ.அன்ரன் மரியதாஸ் (அதிபர்) , திருமதி அனுபாமினி தயாபரன் (பகுதித் தலைவர்)

(8569)

☆ வி. தூயமங்கை -156
☆ த.கோஜிகா-155
☆ ச.கயல்விழி -155
☆ சூ.சனோஜி-150
☆ சூ.சனோசா -153
☆ உ.கோபிசன்-173
☆ ர.பிரணவன்-163
☆ இ.சுயா-156

வாழ்த்துவோர்:-
பாடசாலைச் சமூகம், பெற்றோர்,
கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளின் முயற்சிகளை அழித்தொழிக்க வேண்டும்



காஷ்மீரில் நேற்று முன்தினம் இராணுவ முகாம் மீது தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலை காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கடுமையாக கண்டித்து உள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், ஜம்மு காஷ்மீரில் தீவிரவா திகள் திட்டமிட்டு நடத்திய தாக்குதலில் உயிர்த்தியாகம் செய்தவர்களை வணங்குகிறேன். இந்த தாக்குதலில் பலியான இராணுவ மற்றும் பொலிஸ் படையினரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பாகிஸ்தான் எல்லையில் இருந்து வரும் இது போன்று சீர்குலைக்கும் முயற்சிகளை உறுதியான நடவடிக்கைகள் மூலம் அடியோடு நசுக்க வேண்டும். தீவிரவாதத்தை தடுப்பது மற்றும தீவிரவாதிகளுக்கு எதிராக போரா டுவது போன்றவற்றில் காஷ்மீர் மாநில மக்களுக்கும், அரசிற்கும் காங்கிரஸ் என்றும் உறுதியுடன் துணை நிற்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# பொறியியல் மாணவர்கள் 40 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு

## திடுக்கிடும் தகவல் வெளியீடு

**ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் மகாராஷ்டிரத்தின் அன்ஜுமன் இஸ்லாம் பொறியியல் கல்லூரி மாணவர்கள் 40 பேர் தொடர்பில் இருந்துள்ளதாக திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.**

மகாராஷ்டிர மாநிலம் கல்யாண் பகுதியைச் சேர்ந்தவர் ஆரிப் மஜீத். சிவில் பொறியியலாளரான இவர் தனது நண்பர்கள் மூவருடன் சேர்ந்து, ஈராக் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிர வாத அமைப்புடன் இணைந்து செயற்பட்டவர்.

அங்கு மோசமாக நடத்தப்பட்டதால் தீவிரவாதிகளிடம் இருந்து தப்பி அண்மையில் நாடு திரும்பினார். அவரை பொலிஸார் மும்பை விமான நிலையத்திலேயே கைது செய்தனர். அவரது வெளிநாட்டு தீவிரவாத தொடர்புகள், இந்தியாவில் அவருடன் தீவிரவாத தொடர்பில் இருந்தவர்கள் குறித்து தீவிரமாக விசாரணை நடைபெற்று வருகிறது. அதில். மஜீத் படித்த அன்ஜுமன் இஸ்லாம் பொறியியல் கல்லூரி மாணவர்கள் 40 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பில் இருந்தது தெரியவந்துள்ளது. இவர்கள் அனைவருமே இணைய தளம் மூலம் தீவிரவாத அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதிலும், அவர்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்வதிலும் தீவிரமாக இருந்துள்ளனர்.

மத கொள்கைகளை பின்பற்றுவதிலும், போதிப்பதிலும் தீவிரமாக செயறபட்டுள்ளனர். வாய்ப்பு கிடைத்தால் அனைவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் புடன் இணைந்து போரிட காத்திருந் துள்ளனர். விசாரணை அமைப்பினர் இவர்கள் அனைவரையும் பிடித்து விசாரணை மேற்கொள்ள இருக்கின்றனர்.

இது தொடர்பாக தீவிரவாத தடுப்புப் படை தலைவர் ஹிமான்சு ராய் கூறுகையில், அந்த கல்லூரியில் தீவிரவாத கொள்கையுடன் குழுவாக செயற்பட்டவர்களை ஏற்கனவே கண்டறிந்து விட்டோம். விசாரணையும் ஏற்கனவே தொடங்கி விட்டது என்றார்.

பொலிஸ் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை அளித்து வருவதாக அன்ஜுமன் இஸ்லாம் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். முகாம்களில் 20க்கும் மேற்பட்ட இந்திய இளைஞர்களை தான் பார்த்ததாக மஜீத் விசாரணை அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

இஸ்லாமிய அரசை உருவாக்கும் அமைப்பு என்ற பெருமிதத்துடன ஐ.எஸ்ஐ.எஸ் அமைப்பில் மஜீத் இணைந்துள்ளார். ஆனால் கொலையும் பாலியல் பலாத்காரமும்தான் அவர்கள் முக்கிய வேலை என் பதை அங்கு சென்று தெரிந்து கொண்ட மஜீத் அதிர்ச்சியடைந்தார்.

இந்தியர்கள் உடல் அளவில் பலவீனமானவர்கள் என்று கூறி மஜீத, அவரது நண்பர்களுக்கு போரிட வாய்ப்பு தரவில்லை. கழிவறைகளை கழுவுவது போன்ற வேலைகளை செய்துள்ளார். இதனால் மஜீத் தப்பி இந்தியாவுக்கு வந்து விட்டார் என விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. (இ-5)




# ஜிசாட்-16 செயற்கைக்கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது

## பிரதமர் பாராட்டு

(டில்லி)

இந்தியாவின் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஜிசாட்-16 வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இதனை முன்னிட்டு விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தொலைத் தொடர்பு வசதியை மேம்படுத்தும் வகையில் இந்திய விண்வெளி ஆய்வுக் கழகமான இஸ்ரோ ஜிசாட்-16 என்ற செயற்கைக்கோள் தயாரித்தது.

இந்த செயற்கைக் கோள் 12 ஆண்டுகள் செயற்படும் விதமாக வடிவமைக்கப்பட்டது. ஜிசாட்-16 செயற்கைக்கோள் நேற்று பிரான்ஸ் நாட்டின் பிரெஞ்ச் கயானாவில் உள்ள கவுரு ரொக்கெட் தளத்தில் இருந்து அதிகாலை 2 மணி 10 நிமிடங்களுக்கு ஏரியான் 5விஏ221 என்ற ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

திட்டமிட்டபடி செயற்கைக் கோள் புவிவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது என்றும் செயற்கோள் இயக்கம் நல்ல நிலையில் இருக்கிறது என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஜசாட்-16 செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்திய இந்திய விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள தகவலில், ஜிசாட்-16ஐ வெற்றிகரமாக செயற்படுத்திய பெருமை நமது விஞ்ஞானிகளை சாரும். தகவல் தொடர்பு செயற்கைக்கோள் நமது விண்வெளி திட்டங்களின் முக்கியமான சொத்தாக மாறும். வெற்றிகரமாக ஏவப்பட்ட பிறகு ஜிசாட்-16 நல்ல நிலையில் உள்ளது. ஹஸனில் உள்ள இஸ்ரோவின் மாஸ்டர் கண்ட்ரோல் வசதி செயற்கைக் கோள்கட்டுப்பாட்டை எடுத்துவருகிறது என்று தெரிவித்தார். (இ-5)

# கறுப்பு பண விசாரணையில் இந்தியாவுக்கு உதவ தயார்

## சுவிஸ் வங்கி முன்னாள் அதிகாரி வாக்குறுதி

கறுப்பு பண விசாரணையில் இந்தியாவுக்கு உதவி செய்ய தயாராக இருப்பதாக சுவிட்சர்லாந்தின் யுபிஎஸ் வங்கியின் முன்னாள் அதிகாரி ஸ்டீபானி ஜிபாட் வாக்குறுதி அளித்துள்ளார்.

ஜெனீவா எச்.எஸ்.பி.சி. வங்கி முன்னாள் ஊழியர் ஹெர்வி பால்சியானி, அந்த வங்கியில் கறுப்பு பணத்தை முதலீடு செய்துள்ள ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வாடிக்கையாளர்களின் பட்டியலை பிரான்ஸ் அரசிடம் 2008ஆம் ஆண்டில் அளித்தார். அந்தப்பட்டியலை இந்தியாவுக்கு பிரான்ஸ் அரசு அளித்தது.

உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு அண்மையில் தாக்கல் செய்த கறுப்பு பண முதலீட்டாளர்கள் பட்டியல் ஹெர்வி பால்சியானி அளித்த பட்டியல்தான். இந்நிலையில் சுவிட்சர்லாந்தின் மிகப்பெரிய வங்கியான 'யூனியன் பாங்க் ஒப் சுவிட்சர்லாந்தின்' (யுபிஎஸ்) முன்னாள் ஊழியர் ஸ்டீபானி ஜிபாட் கறுப்புபண விசாரணையில் இந்தியா வுக்கு உதவமுன்வந்துள்ளார். இதுகுறித்து தனியார் தொலைக் காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

சுவிட்சர்லாந்து வங்கிகளில் கோடிக்கணக்கில் கறுப்பு பணம் கொட்டப்பட்டுள்ளது. யுபிஎஸ்போன்ற பெரிய வங்கிகள் இந்திய முதலீட்டா ளர்களை குறிவைத்து செயற்படுகின்றன.

தற்போது யுபிஎஸ் வங்கியின் நெட்வேர்க் மும்பையை மையமாகக் கொண்டு செயற்படுகிறது. அவர்கள் வாடிக்கையாளர்களை எவ்வாறு ஈர்ப்பார்கள், எங்கு, எப்படி வாடிக்கையாளர்களை சந்திப்பார்கள் என்பது குறித்து இந்திய விசாரணை அதிகாரிகளுக்கு விளக்க தயாராக உள்ளேன். உலகின் அனைத்து மூலை முடுக்கிலும் சுவிட்சர்லாந்து வங்கியின் நெடவேர்க் வியாபித்து பரவி யுள்ளது. நாடுகள், நகரங்கள் தோறும் அந்த வங்கிகளுக்கு தொடர்புகள் உள்ளன.

நான் யுபிஎஸ் வங்கியில் பணியாற்றியபோது, பணக்காரர்களை கண்டறிந்து அவர்களை வங்கியில் முதலீடு செய்யவைப்பதுதான் எனக்கு அளிக்கப்பட்ட பிரதான பணி. 9 ஆண்டுகளாக அந்த வங்கியில் பணியாற்றினேன். 2008ஆம் ஆண்டில் மேலதிகாரி கள் எனது கணனியில் பதிவு செய் யப்பட்டிருந்த பல்லாயிரக்கணக் கான வாடிக்கையாளர்களின் ஆவ ணங்களை அழிக்குமாறு உத்தர விட்டனர். அதற்கு நான் மறுத்த போது என்னை பணிநீக்கம் செய்து விட்டனர்.

தற்போது பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளின் கறுப்பு பண விசாரணைக்கு உதவி வருகிறேன். மேலும் சில நாடுகளுக்கும் உதவி செய்து வருகிறேன். ஆனால் அந்த நாடுகளின் பெயர்களை இப்போது வெளியிட முடியாது. இதேபோல் இந்தியாவின் கறுப்பு பண மீட்பு விசாரணைக்கும் உதவ தயாராக உள்ளேன். இவ்வாறு அவர் மேலும் தெரிவிததார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்தது போல
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விலாசம் இல்லாத மைத்திரிக்கு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள்

## மகிந்தவே வெல்வார் - பிரதியமைச்சர் காதர்

கடந்த காலங்களில் இடம்பெற்ற 30 வருட கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இந்நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. யார்? இந்த மைத்திரி. விலாசம் இல்லாத ஒரு பொது வேட்பாளரே மைத்திரி என சுற்றாடல் அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏ.ஆர்.எம். காதர் சாடியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடவும் ஒரு வாக்கேனும் குறைவாகத்தான் இவர் பெறுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி, அலவத்துக்கொடவிலிருந்து தெல்கொஸ்கொடவுக்கு செல்லும் வீதி, 2 கோடி ரூபாய் செலவில் காபட் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது. இதன் ஆரம்பிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கடந்த தேர்தலைவிடவும் இம்முறை கூடுலான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவார் என்பதில் எவ்வித சந்தேகமில்லை.

மைத்திரிபால சிறிசேன கட்சியை விட்டு வெளியேறிச் சென்றமையால் அரசுக்கு அணுவளவேனும் பாதிப்பு கிடையாது. இவரை நம்பி மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

கடந்த காலங்களில், அக்குரணை பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் கூடுதலாக நடைபெற்றதாக கூறப்பட்டது. ஆனால் அங்கு எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் இடம் பெறவில்லை. எமது ஜனாதிபதியின் காலத்திலேயே சகல அபிவிருத்திப் பணிகளும் நடைபெற்றன.

ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் 70 வீதமான முஸ்லிம் வாக்காளர்கள் உள்ளனர். நான் இந்த தேர்தல் தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பின், கோடிக் கணக்கான அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றேன். இதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே வழிசமைத்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# எதிரியின் சதியை முறியடிக்க நாங்கள் என்ன செய்தோம்?

தமிழர்களை அழிக்க பல்வேறு வழிகளிலும் சதி முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். ஓர் உண்மையை காலங் கடந்தேனும் அவர் கூறியிருப்பது பாராட்டுக்குரியது.

2009-ம் ஆண்டுடன் போர் முடிவுற்றது என்ற வெளித்தோற்றம் நாட்டில் சமாதானம் நிலவுவதாக காட்டி நிற்கிறது. ஆனால் தமிழர்கள் இன்னுமொரு விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து விடக்கூடாது என்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் மிகத் தீவிரமாக உள்ளனர்.

அதற்காக தமிழினத்தை - தமிழ்ச் சமூகத்தை எந்தெந்த வழிகளிலெல்லாம் பின்னடைய வைக்க முடியுமோ அவை அனைத்தையும் தென்பகுதி ஆட்சிப்பீடம் செய்து வருகிறது.

அதில் முக்கியமானது மாணவர்களிடையே போதை வஸ்துப் பயன்பாடாகும். போருக்குப்பின்பான எங்கள் நிலைமை எப்படி உள்ளதென்று ஒரு கணம் ஆராய்ந்தால், எங்கள் பணம் சாராயத்திற்கும் போதைப் பொருளிற்கும் தொலைபேசிக்கும் சோடாவுக்குமாக அழிந்து போக, எங்கள் உழைப்பாளர்களின் ஊதியம் லீசிங் கம்பனிகளுக்காகி விடுகின்றது. பகலிரவாக உழைத்து லீசிங் கட்டி முடிக்க முடியாமல் உழைத்த பணத்தையும் இழந்து சொத்தையும் பறிகொடுத்த பரிதாபங்கள் தமிழ் மண்ணில் தாராளம். இவை தற்கொலைகளாக, தலைமறைவுகளாக குடும்ப உடைவுகளாக மாற்றமடைந்துள்ளன.

2009-ம் ஆண்டு போர் முடிந்து ஏ9 பாதை போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்ட போது வடபுலத்திற்கு அதிரடியாக வந்திறங்கியவை லீசிங் கம்பனிகள் எனில் அவை தமிழ் மக்களை வாழ வைப்பதற்காகவல்ல. மாறாக அந்தக் கம்பனிகளின் வருகை எதற்கானதென்பதை இப்போதைய நிலைமை வெளிப்படுத்தி நிற்கும்.

போரினால் எங்கள் மண் அழிந்து போயிற்று. நாங்கள் கண்ணீர் விட்டு வளர்த்த பயன்தரு மரங்கள் தறிபட்டும் தலை துண்டிக்கப்பட்டும் இறந்து போயின. இந்நிலையில் தென்பகுதியில் சந்தன மரமும் தேக்கு மரமும் நடப்படுவதற்கு உங்கள் நிதியைத் தாருங்கள் என்று கேட்ட பரிதாபங்கள் எங்கள் அரசியல் தலைவர்களிடம் - புத்திஜீவிகளிடம் இருந்த பலவீனம் அல்லவா?

பளையில், முகமாலையில், எழுதுமட்டுவாழில், கிளிநொச்சியில், முல்லைத்தீவில் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டன. உங்கள் மண்ணில் தென்னைகளை மீளநடுங்கள். மானியங்கள் தருகிறோம்; வட்டியில்லாக் கடன் தருகிறோம் என்று ஓடிவராத அமைப்புகள் தென்பகுதியில் சந்தன மரமும் தேக்க மரமும் நடுவதற்கு நிதி வேண்டி; எல்லாம் இழந்த எங்களிடம் வந்தன என்றால் இவை தமிழினத்தை அழிக்க எத்துணை சதி என்பதை சொல்லவா வேண்டும்?

ஆக, வடக்கின் முதலமைச்சர் கூறிய விடயம் அனைவருக்கும் தெரிந்ததே. அதிலும் அரசியல்வாதிகளை விட பொதுமக்கள் இதனை நன்கு அறிந்திருந்தனர்.

கடந்த 30 ஆண்டுகால விடுதலைப் போராட்டத்தை நடத்திய இனத்தின் எதிர்காலத்தை அழிக்க பேரினவாதம் கடும் பிரயத்தனம் எடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

எனவே எம்மை அழிக்க எதிரிகள் முன்னெடுக்கும் சதி முயற்சிகளைத் தவிடுபொடியாக்க நாங்கள் எடுத்த முயற்சிகள் என்ன என்பதுதான் இப்போது முன்னெழ வேண்டிய கேள்வியாகும்.

எதிரியை குற்றம் சாட்டுவதை விடுத்து எங்களை நாங்கள் பாதுகாக்க வியூகம் அமைக்க வேண்டும். இதனைச் செய்வது தமிழ் அரசியல்வாதிகளினதும் தமிழ்ப் புத்திஜீவிகளினதும் தலையாய கடமை.

எங்கள் மாணவர்களிடையே போதைப்பாவனை என்றால் நாங்கள் என்ன செய்து கொண்டிருந்தோம் என்று கேட்பது கட்டாயமானதல்லவா? தேர்தல் காலத்தில் மட்டும் தமிழ் அரசியல்வாதிகள் வடக்கில் முகாமிட்டு மேடையேறி; உரத்துக் கத்திவிட்டால் எல்லாம் சரிவரும் என்று நினைக்கலாகாது. வினைத்திறனுடைய செயல்திட்டங்கள், இளைஞர் அணிகள், மாணவர் மன்றங்கள் உருவாக்கப்பட்டு வழிப்படுத்தப்பட வேண்டும் இதைச் செய்யாவிட்டால் எதிரியின் இலக்கு எளிதில் அடையப்படும்.

# புலிகள் மறைத்து வைத்த மசகு எண்ணெய் மீட்பு

(முல்லைதீவு)

முல்லைத்தீவு - வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மசகு எண்ணெய் பெரல்கள் ஒன்பது இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெள்ளமுள்ளிவாய்க்கால் கடற்கரைப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் இதனை மீட்டுள்ளனர்.

இறுதி யுத்தத்தின் போது, கடற் புலிகளினால் தங்களது படகுகளுக்கு பயன்படுத்த இவை பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் யுத்த காலத்தில் அந்தப் பகுதியில் கடற்புலிகளின் முகாம் அமைந்திருந்ததாக தெரியவந்துள்ளது. (செ-6)

# கட்டுப்பணம் செலுத்தல் நேற்றுடன் முடிவு

(கொழும்பு)

ஜனவரி மாதம் 8ஆம் திகதியன்று நடைபெறப்போகும் ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று நண்பகலுடன் முடிவடைந்தன.

இதன்படி தமது கட்டுப்பணங்களை 17 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் 2 சுயேட்சை குழு வேட்பாளர்களும் செலுத்தியுள்ளனர்.

இந்தநிலையில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் நடவடிக்கைகள் இன்று நடைபெறவுள்ளன.

முற்பகல் 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை இரண்டு மணித்தியாலங்கள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்காக கொழும்பிலும் தேர்தல் திணைக்கள பிரதேசத்திலும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (செ-6)

# சடலத்தை பொறுப்பேற்க பொலிஸார் கோரிக்கை

(கரணவாய்)

உறவினர்களுடன் வசித்து வந்த வயோதிப பெண்ணொருவர் உயிரிழந்த நிலையில் அவரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு நெல்லியடிப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

யாழ்.கரணவாய் தெற்கைச் சேர்ந்த இராசகோபால் இராஜேஸ்வரி (வயது 66) என்ற வயோதிபப் பெண்ணின் சடலத்தையே பொறுப்பேற்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு திடீரென உயிரிழந்த குறித்த வயோதிபப் பெண்ணின் மகன் முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் வசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

எனவே உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அவரது மகன் வந்து பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என பொலிஸாருக்கு மரண விசாரணை அதிகாரி கூறியதாகவும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

# ஏ26 வீதியில் அவதானம் தேவை

(கொழும்பு)

மகியங்கனை ஏ26 வீதியில் தெல்தெனிய ரம்புக்வெல்ல பிரதேசத்தில் அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

விக்டோரியா நீர்தேக்கத்தில் நீர் பெருக்கெடுக்கும் அபாயம் நிலவுவதன் காரணமாக குறித்த பிரதேசங்களில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு மகியங்கனை பொலிஸார் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (செ-11)

# ஒருங்கிணைப்பு கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (செ-6)

JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
2014
மறக்காத மகளிர் தினத்தில் மட்டும் மறுக்கப்படும் பெண் சுதந்திரம் பற்றிப் பேசாமல் நித்தமும் அதனை உணர்வதற்கான சுதந்திர சூழலை உருவாக்குவோம்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### இனிமை கெடாத வாழ்வு



வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சி நிலவவேண்டும். அதற்கு ஏமாற்றமில்லாமல் வாழவேண்டும். ஏமாற்றம் என்பது துன்பமும் சோர்வும் அளிக்கின்ற ஒரு மனநிலை. அது தன்னாலும் வரலாம். பிறராலும் வரலாம். இயற்கையாலும் கூட எழலாம்.

பேராசை, அறியாமை, தப்புக்கணக்கு, விழிப்பின்மை, பகை, இயற்கைச் சீற்றம் ஆகிய ஆறுவகையில் ஏமாற்றங்கள் வருகின்றன. ஏமாற்றத்தின் அளவுக்கேற்ப அதிர்ச்சியும் துன்பமும் விளையும். அவ்வப்போது ஈடு செய்துவிடக்கூடிய சிறு சிறு ஏமாற்றங்களும் உண்டு. நீண்ட நாட்களுக்குத் துன்பம் தொடரக்கூடிய ஏமாற்றங்களும் உண்டு. வாழ்நாள் முழுவதிலும் கூட ஈடு செய்து விடமுடியாத ஏமாற்றங்களும் உண்டு.

பொதுவாக எல்லோரும் தங்கள் வாழ்வில் காணும் துன்பங்களுக்கு இந்த ஏமாற்றமே பெரும்பாலும் காரணமாக இருப்பதால் ஏமாற்றத்தைத் தவிர்க்கக் கூடிய சிந்தனையும் அந்தச் சிந்தனை தந்த விளக்கத்தைச் செயலுக்கு கொண்டு வருகின்ற அறிவு மேன்மையும் வேண்டும். விழிப்பின்மையால் அலட்சியம், அசிரத்தை, சோம்பல் இவற்றுக்கு இடம் கொடுத்தால் செயல்திறன் குன்றிவிடும். அம்மாதிரியான மனநிலையில் செயலாற்றி அதன் காரணமாக வெற்றி தவறிப்போகும் போது கவலை வரும்.

சிந்தனையோடு ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்கவேண்டும். நல்ல முடிவைச் செயலுக்குக் கொண்டு வரும் திறமும் துணிச்சலும் வேண்டும். இத்தகைய சிந்தனையும் அதனால் ஏற்படும் விழிப்புணர்வும் வாழ்க்கை முறையும் மனிதனின் வாழ்வில் வெற்றியையும் அமைதியையும் தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து புனேயை வீழ்த்தியது டில்லி




புனேக்கு எதிரான காற் பந்து போட்டியில் டில்லி அணி வெற்றி பெற்றது. இந் தியன் சுப்பர் லீக் காற்பந்து (ஐ.எஸ்.எல்.) போட்டித் திரு விழாவில் நேற்றிரவு புனே யில் நடந்த 51ஆவது லீக்கில் டில்லி டைனமோஸ்- புனே சிட்டி அணிகள் மோதின.

நீண்ட நேரம் கோல் இல லாமல் நகர்ந்த இந்த ஆட்டத் தில், 88 ஆவது நிமிடத்தில் டில்லி வீரர் டாஸ் சான்டோஸ் கோல் அடித்து முட்டுக் கட்டையை தகர்த்தார் அதுவே வெற்றி கோலாக அமைய டில்லி அணி 1-0 என்ற கோல் கணக்கில் புனேயை தோற்கடி த்தது.

இந்த வெற்றியின் மூலம் டில்லி அணி (4 வெற்றி, 5 சமநிலை, 4 தோல்வி)17 புள்ளிகளுடன் அரைஇறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண் டது.

இன்னும் ஒரு ஆட்டத் தில் ஆட உள்ள புனே அணி யின் (4 வெற்றி, 4 சமநிலை, 5 தோல்வியுடன் 16 புள்ளி) அரை இறுதி வாய்ப்பு கேள்விக் குறியாகி இருக்கிறது. (க)

விளையாட்டுச் செய்திகள்




## ஹியூக்ஸ் உயிரிழந்த 7வது பிட்சுக்கு ஓய்வு

அவுஸ்திரேலிய இளம் வீரர் ஹியூக்ஸ் பந்து தாக்கி சுருண்டு விழுந்த சிட்னி மைதானத்தின் ஏழாவது பிட்சுக்கு ஓய்வு அளிக்க ப்படடுள்ளது. இனிமேல் அந்த பிட்சை பயன்படுத்துவது இல்லை என்று சிட்னி கிரிக்கெட சங்கம் முடிவு செய்துள் ளது.

இது குறித்து சிட்னி பிட்ச் பராமரிப்பாளர் டாம் பார்க்கர் கூறுகையில், 'சிட்னி மைதா னத்தில் மொத்தம் 10 பிட்ச் கள் உள்ளன. இதில் ஏழா வது பிட்ச்சில் துய்ர சம்பவம் நடந்தது. அந்த பிட்ச்சில் விளையாட எந்த வீரரும் முன வரமாட்டார்கள். அனை வரின் மனதிலும் இன்னும் துயரம் குடி கொண்டுள்ளது. எந்தவொரு வீரரும் மரணம் அடைவதை நான் விரும்ப வில்லை. நான் தயாரித்த பிட்ச்சில் யாரும் இரத்தத்தை சிந்த நான் விரும்ப மாட டேன். நடந்த சம்பவம் அனை வரையும் அதிர வைத்துள்ளது.

இந்த நினைவு அவ்வ ளவு விரைவில் நமது மனதை விட்டு நீங்கி விடாது. மைதான ஊழியர்கள் இன்னும் அதிர்ச் சியில் இருந்து மீளவில்லை. எனவே தான் இந்த பிட்ச்சை மீண்டும் பயன்படுத்துவதி ல்லை என்ற முடிவுக்கு வந்து இருக்கிறோம்' என்றார். (க)

## மனப்போராட்டத்தில் அவுஸ்திரேலியா



இந்தியா-அவுஸ்திரேலியா மோதும் முதல் டெஸ்ட் நாளை அடிலெய்ட்டில் தொடங்கு கிறது.

சிட்னியில் நடந்த உள் ளூர் போட்டியில், சியான் அபாட் வீசிய 'பவுன்சர்' தாக்கியதில் காயமடைந்த அவுஸ்திரே லிய வீரர் பிலிப் ஹியூக்ஸ், சிகிச்சை பலனின்றி கடந்த நவம்பர் 27ஆம் திகதி மரண மடைந்தார்.

இவரின் உடல் கடந்த 3ஆம் திகதி அடக்கம் செய் யப்பட்டது. இந்த சோகத்தில் அணித்தலைவர் கிளார்க் உள்ளிட்ட அவுஸ்திரேலிய வீரர்கள் உள்ளனர்.

இந்நிலையில், நாளை 9 ஆம் திகதி இந்தியா, அவுஸ் திரே லியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி அடிலெய் டில் தொடங்குகிறது.

சோகத்திலிருந்து மீண்டு கிரிக்கெட்டிற்கு திரும்ப வேண் டிய கட்டாயத்தில் அவுஸ்தி ரேலிய வீரர்கள் உள்ளனர்.

இது குறித்து ரிக்கி பொண் டிங் கூறுகையில், பிலிப் ஹியூக்ஸின் மரணத்திற்கு பின் முதல் டெஸ்ட் போட்டி நடக்கவுள்ளது. சோகத்திலி ருந்து மீண்டு இம்மாதிரி யான சூழ்நிலையை எப்படி கையாள வேண்டும் என எந்தவொரு வீரருக்கும் தெரியாது.

இதனால் எங்கள் அணி வீரர்கள் மிகப்பெரிய மனப் போராட்டத்தை எதிர் கொள்ள உள்ளனர். இருப்பினும், இதிலிருந்து விடுபட்டு சிறப் பாக செயற்படுவர் என நம்பு கி றேன் என்று கூறியுள்ளார்.(க)

## தாய்லாந்து வி. போட்டியில் யாழ். பல்கலைக்கழக வீரர்

உலக பல்கலைக்கழகங்க ளுக்கு இடையில் தாய்லா ந்தில் நடைபெறவுள்ள விளை யாட்டுப் போட்டிகளில் பங்கே ற்பதற்காக சென்றுள்ள இல ங்கை பல்கலைக்கழக வீரர கள் குழாமில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட மாண வன் எம்.என்.சித்திக் உள் ள ங்குவதாக யாழ்ப்பாண பல் கலைக்கழக உடற்கல்வி அலகு பணிப்பாளர் கே.கணேச நா தன் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

உலக பல்கலைக்கழக ங்களுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டி கடந்த வியா ழக் கிழமை தொடக கம் இன்று 8 ஆம் திகதி வரையிலும் இடம்பெறவு ள்ளது. இதற்காக இலங்கை யிலுள்ள பல்கலைக்கழக ங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் குழாம் தாய்லாந்து சென்றுள்ளது.

இதில், பளுதூக்கல் போட் டியில் பங்குபற்றுவதற்காக சித்திக், இலங்கை பல்கலை கழகங்களின் குழாமில் இடம பெற்றுள்ளார்.

இலங்கையிலுள்ள பல் கலைக்கழங்களுக்கிடை யில் அண்மையில் இடம் பெற்ற பளுதூக்கல் போட்டி யில், 105 கிலோ எடைப்பி ரிவில் சித்திக் முதலிடத்தை பெற்றமையடுத்தே, இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்க ழகத்திலிருந்து உலக பல்க லைக்கழங்களுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் பங்கு பற்றுவதற்காக செல்லும் முதல வீரன் சித்திக் என்பதுடன், அவ ரது பயிற்றுநராக எம்.இளம் பிறையன் கடமையாற்று கின்றார்.

கடந்த வருடம் 'ரஷ்யா வில் இடம்பெற்ற உலக பல்க லைக்கழகங்களுக்கிடையி லான போட்டியின் உயரம் பாய்தல் போட்டியில் பங்கு பற்றுவதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து ஏ.ஜெயரூபன் சென்று பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (க-23)

## கோலியுடன் உள்ள காதலை ஒப்புக் கொண்ட அனுஷ்கா

நடிகை 'அனுஷ்கா சர்மா இந்திய கிரிக்கெட் வீரர் கோலியுடன் உள்ள காதலை ஒப்பு கொண்டுள்ளார்.

முன்னணி கிரிக்கெட் வீரர் கோலியும், நடிகை அனுஷ்கா சர்மாவும் கடந்த 1 வருடங்களுக்கு மேலாக பல இடங்களுக்கு ஒன்றாக சுற்றித் திரிந்து தங்கள் கரதலை வளர்த்து வந்தனர்.

இதுபற்றி அவர்கள் எந்தவித அறிவிப்பையும் வெளியிட்ட தில்லை. ஆனால் சில வாரங்களுக்கு முன்பு கோலி, ' ஆமா..நான் அனுஷ்காவை காதலிக்கிறேன். அதற்கு என்ன? என பாய்ச்சல் முகமாக தனது காதலை ஒப்புக் கொண்டார். இதைத் தொடர்ந்து தற்போது அனுஷ்காவும் கோலியுடனான காதலை ஒப்புக் கொண்டுள்ளார். இதுபற்றி அவர் கூறுகை யில், எனக்கும், விராட் கோலிக்கும் உள்ள உறவை மறைப் பதற்கு ஒன்றுமில்லை. நாங்கள் ஒன்றாக செல்வதை மறைக்க வில்லை. ஆனால் நாங்கள் அதுபற்றி பேசமாட்டோம்.

நாங்கள் எங்கள் வாழ்க்கையை மிகவும் இயல்பாக வாழ்ந்து வருகிறோம். எங்களுக்குள் இருக்கும் உறவை பற்றி யாரும் பேசுவதை விரும்பவில்லை. அது பொழுது போக்கான செய்தி கிடையாது என்று கூறியுள்ளார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக்கார ஜொலிப்பு : இலங்கை வெற்றி



இங்கிலாந்தின் ஜேம்ஸ் ரெய்லர், அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் அசத்தலாக துடுப்பெடுத்தாடி அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கைக்கு உறுதுணை வழங்கிய போதிலும், இலங்கையின் சிரேஷ்ட வீரர்களான சங்கக்கார – ஜெயவர்த்தனவின் இணைப்பாட்டத்தை, அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் முடித்து வைக்க, இங்கிலாந்து அணிக்கு எதிரான 4ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 2 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுகிறது.

இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் நிறைவில் இலங்கை 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த நிலையில்,

4 ஆவது ஒருநாள் போட்டி நேற்று கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கில் நடைபெற்றது.

இங்கிலாந்து அணியின் வழமையான அணித்தலைவர்குக் போட்டித்தடை காரணமாக பங்குபற்றாத நிலையில் ஒய்ன் மோர்கன் இங்கிலாந்து அணிக்கு தலைமை தாங்கினார்.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு முற்பகுதியில் இளம் வீரர் ஜேம்ஸ் ரெய்லரின் துடுப்பாட்டமும் பிற்பகுதியில் அணித் தலைவர் மோர்கனின் துடுப்பாட்டமும் கைகொடுக்க இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் இளம் வீரர் ஜேம்ஸ் ரெய்லர் 90, அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் 62 (47பந். 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் ஹேரத், டில்சான், மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

266 ஓட்டங்கள் என்ற சவாலான வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு நட்சத்திர வீரர்களான குமார் சங்கக்கார – மஹேல ஜெயவர்த்தன இணை 3ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த 96 ஓட்ட இணைப்பாட்டமும், மத்யூஸ் – திரிமன்னே இணை 5 ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த 53 ஓட்ட வெற்றி இணைப்பாட்டமும் கைகொடுக்க இலங்கை அணி 2 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் சங்கக்கார 86, அணித் தலைவர் மத்யூஸ் ஆட்டமிழக்காமல் 51, மஹேல ஜெயவர்த்தன 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் கிறிஸ் ஜோர்டன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் சங்கக்கார தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஆவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் பல்லேகலேயில் ஆரம்பமாகிறது.

# இடறுகிறது...

வெறுப்பேற்றும் அறிக்கைகளாலும் மனமுடைந்து விரக்தி நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மைத்திரிபால தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பாக இதுவரை எவ்விதமான கருத்துக்களையும் முன்வைக்காததுடன் இனப்பிரச்சினை தொடர்பாக மனோ கணேசனினால் சிங்கள மொழியில் முன்வைக்கப்படும் கருத்துக்களையும் காதில் வாங்கிக் கொள்ளாது அலட்சியமாக இருந்து வருவதாகவும் மனோ கணேசன் தனது முக நூலில் பிடிகொடாது மறைமுகமாக கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதுவரை காலமும் தமிழ்க் கூட்டமைப்பினாலும், மனோ கணேசனினாலும் இனவாதக் கட்சி என கூறப்பட்ட ஜாதிக ஹெல உறுமய கட்சி தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைப்பதை நேரடியாகவே பல தடவைகள் எதிர்த்து வந்தது. இப்போது அக்கட்சி பொது எதிரணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளமையையும் தமிழ்க் கூட்டமைப்பினாலும், மனோ கணேசனினாலும் ஜீரணிக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் மேற்படி தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தொடர்பாகவும், பொது எதிரணி தொடர்பாகவும் எந்தவித அதிருப்தியோ, மனமுடைந்து விரக்தியோ அடையவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தொடர்பாகவும், பொது எதிரணி தொடர்பாகவும், நான் ஒருபோதும் அதிருப்தியோ, மனமுடைந்து விரக்தியோ அடையவில்லை. உண்மையில் முன்னைவிட அதி தீவிரமாக நானும், எங்கள் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியும், பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காகவும், மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்காகவும் கடுமையாக உழைத்து கொண்டிருக்கின்றோம் என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன் என அவா மேலும் தெரிவித்துள்ளார். (செ-6)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு புவனேஸ்வரி



பழைய உடையார் ஒழுங்கை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு புவனேஸ்வரி (மெக்கானிக் குட்டி அண்ணா அவர்களின் துணைவியார்) அவர்கள் 06.12.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (08. .2014) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் மகள் கஜமதியின் இல்லமான திகிரி வீதி, தும்பளை, பருத்தித்துறையில் நடத்தப்பட்டு தகனக்கிரியைக்களுக்காக பூதவுடல் கடற்கரை கோரியடியில் அமைந்துள்ள கந்தனை வெட்டிய ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : தட்சணாமூர்த்தி முரளிதரன் (மருமகன்
முரளிதரன் கஜமதி (மகள்)

திகிரி வீதி, தும்பளை,
பருத்தித்துறை.

தொ.பே : 0776647836, 0779230253

(சி-9305)

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஜீ
அவர்களின்
நல்லூரில் இளையோர்களுக்கான
உடல் உள ஆன்மீக
மேம்பாட்டுப் பயிற்சிகள்



எளிய யோகாசனம், பிராணாயாமம்,
தியானம் கற்பிக்கப்படுகின்றது

டிசம்பர் மாதம் 9, 10, 11, 12 ஆம் திகதிகள்

வயது:- 7 - 13 வரை மற்றும் 14 - 28 வரை
நேரம்: காலை 8.30 - 11.30 மணிவரை / மதியம் 12.45 - 3.45 மணிவரை
இடம்: மகேஸ்வரன் மண்டபம், நல்லூர் வடக்கு வீதி.



பயன்கள்
- தன்னம்பிக்கை சுயநம்பிக்கை வளர
- கல்வியில் ஈடுபாடு
- மன ஒருமைப்பாடு
- தங்கள் திறமைகளை வெளிப்படுத்த
- தலைமைப் பண்புகள்
- ஞாபக சக்திகள் அதிகரிக்க
- மன அமைதி பெற
- சுயஒழுக்கம் மேம்படும்





அனைவரையும் பங்கு பெறுமாறு
அன்புடன் அழைக்கின்றோம் (8583)

தொடர்புகளுக்கு: 0774936221, 0777607008

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 . 12 . 1956
இறப்பு 08 . 12 . 2011

பிறப்பு 08 . 02 . 1965
இறப்பு 08 . 12 . 2011

மார்க்கண்டு உதயகுமார் உதயகுமார் வசந்திமாலா

கருவில் உருவடித்து ஊனில் உயிர் தந்து
வாழ்வில் வளம் தந்த இதய தெய்வங்களே
அரக்கனின் அராஜகத்திற்கு ஆகுதி ஆனீரோ
ஆண்டு மூன்று ஆனாலும்
ஆரும் இல்லை எம் துயர் போக்க
ஆண்டவனே! ஆணையிடு!
நீதி நிலைக்க நீதித்தாயின் கண் திறக்க
அதுவே ஆருயிர் மருந்தாம் எமக்கு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புப் பிள்ளைகள்
செந்தூரன், குகதீபன்,
சங்கீதன், கோபிகா

நீர்வேலி மேற்கு, நீர்வேலி,
இராசவீதி 4-ம் மைல்

(8582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் வனலாகா பிரி...

என அடையாளப்படுத்தி பெருமளவு பொது மக்களின் நிலத்தை சுவீகரிப் பதற்கு முயற்சிக்கின்றனர்.

இதற்காக முல்லைத்தீவு மாவட் டத்தில் கரிப்பட்ட முறிப்பு, மண வாளம்பட்டு மற்றும் நெடுங்கேணி பகுதி ஆகியவற்றில் பொது மக் களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் மற்றும் வாழ் நிலங்கள் வனலாகா பிரிவினரால் சுவீகரிப் பதற்காக எல்லைகளிடப்பட்டுள்ளது.

ஆனால் குறித்த காணிகள் மக் களால் தொடர்ந்தும் பயன்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதேபோன்று கிளிநொச்சி மாவட டத்தில் புதுக்காடு மற்றும் காந்தி கிராமம் போன்றனவும் மேற்கணட வாறு வனலாகா பிரிவினரால் சுவீ கரிப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. மேற்படி காணிகளிலும் மக்கள தற் போதும் வாழ்ந்து வருவதுடன் அந்தப் பகுதிகளில் மக் களுக்கு வீட் டுத்திட்டங்களும் வழங்கப்பட்டி ருக்கின்றன.

மேலும் இவ்வாறு வனலாகா பிரிவினர் காணிகளை சுவீகரிப் பதற்கான அப்பகுதி பிரதேச செய லர் மற்றும் கிராமசேவகர் ஆகி யோருடன் தொடர்பு கொள்ளாமல் தாங்களாகவே பல ஆண்டுகளுக்கு முற்பட்ட வரைபடங்களை அடிப் படையாக கொண்டு காணிகளை அளந்து வருவதாக குற்றம்சாட்டப் பட்டுள்ளது.

ஆனால் அந்த வரைபடத் திலுள்ள காணிகள் பல பின்னர் வந்த அரசாங்கங்களினால் மக் களுக்கு வழங்கப்பட்டவை. இந் நிலையில் வடக்கில் நில சுவீகரிப்பு சமகாலத்தில் 3-வது புதிய வடிவம் எடுத்து வந்திருக்கின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (செ-6)

## மகிந்தவை திருப்...

வதற்கு காரண மாகவிருந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, டிசெம்பர் 9 ஆம் திகதி திருப்பதி வெங்கடாஜலபதி ஆலயத் துக்கு வர இருப்பதாகவும், அடுத்த நாள் காலை சுவாமி தரிசனம் செய்ய இருப்பதாகவும் செய்தி வெளியாகி யுள்ளது.

ஈழத்தில் 2,000 க்கும் அதிக மான இந்து ஆலயங்களை இடித்து தரைமட்டமாக்கிய அவரை, திருப் பதி ஆலயத்தில் மரியாதையுடன் வரவேற்பது சாத்தானுக்கு சாமரம் வீசுவதற்கு இணையான செயலா கும். தமிழர்களின் உணர்வுகளை இதைவிட மோசமாக யாராலும் புண்படுத்த முடியாது.

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா என தமிழர்கள் அதிகம் வாழக் கூடிய நாடுகளில் சுதந்திரமாக நடமாட முடியாத அவர், நினைத்த போதெல்லாம் இந்தியா வந்து செல்ல மத்திய அரசு அனுமதிப்பது சரியல்ல. எனவே, அவர் திருப்பதி வர அனுமதிக்கக் கூடாது என வலி யுறுத்தினார். (செ-6)

## இடறுகிறது...

தமிழர்கள் எதிர்பார்க்கும் நிரந் தரத்தீர்வினை முன்வைக்க பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரி பால சிறிசேன முன்வருவார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் அந்த எதிர்பார்ப்புக்களை எல்லாம் குழி தோண்டி புதைக்கும் வகையில் மைத்திரியின் அறிக்கை கள் உள்ளன.

குறிப்பாக தமிழர்கள் முன் வைத்து வரும் சமஷ்டி அடிப்படை யிலான தீர்வு தொடர்பான பேச்சுக்கே இடமில்லையெனவும் ஒற்றை ஆட் சிக்குள்ளேயே பேசி சில இணக்கப் பாடுகள் எட்டப்படும் எனவும் மாகாண சபைகளுக்கு மகிந்த வழங்கிய அதிகாரங்கள் போதுமானது என்ற வகையிலும் அறிக்கைகளை வெளி யிட்டு வருகிறார்.

இதன் காரணமாக அக்கட்சிக் குள் மைத்திரியை மறைமுகமாகக் கூட ஆதரிக்க வேண்டாம் என் னும் கருத்து வலுப்பெற்றுவரு கிறது.

மைத்திரிபாலவின் அறிக்கை களை வாசித்த தமிழ் மக்களும் அவருக்கு தமிழ்க் கூட்டமைப்பு மட் டுமல்ல எந்தவொரு தமிழ்க்கட்சியும் ஆதரவு வழங்கக் கூடாது எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் தமிழ் கூட்டமைப்புக் குள் இப்போது பாரிய நெருக்கடியும் இழுபறி நிலையும் காணப்படு வதாக அக்கட்சி உள்ளக வட்டாரங் களிலிருந்து நம்பகரமாக தெரிய வந்துள்ளது.

இதேபோன்று பொது வேட்பா ளர் தெரிவில் முன்னின்று பாடுபட்ட மற்றுமொரு தமிழ்க் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனும் மைதிரிபாலவின் எதேச்சையானதும் தமிழ்மக்களை

23 ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி...

மோட்டார் சைக்கிள்கள் வழங்கப் பட்டு வருகின்றன.

இந்த மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கப்பெற்றவர்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப்பாக அமைந்துள்ளது.

எனினும் அண்மையில் பொல நறுவையில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற கூட்டத்துக்கு முன்னர் ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது ஊர்வலத்தில் பல மோட்டார் சைக்கிளோட்டிகளும் பங்கேற்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தி னால் வழங்கப்பட்ட மோட்டார்சைக் கிள்களுடன் ஊர்வலத்தில் பங்கேற்ற தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## 5 எம்.பிக்கள்...

வுடன் கலந்துரை யாடல்களை நடத்தியுள்ள போதும் பல காரணங் களால் அரசாங்கத்துடன் தொடர்ந் தும் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-6)

## வேட்பு மனு...

அவரது ஊடகப்பிரிவு அறி வித்துள் ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவை எதிர்த்து சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான மைத்திரி பால சிறிசேன பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய தேசியக்கட்சியின் கீழ் உருவான பொது எதிரணியில் களமிறங்கியுள்ளார்.

இந் நிலையில் தனது வேட்பு மனுவில் மைத்திரிபால சிறிசேன நேற்றிரவு கைச்சாத்திட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## பணத்திற்காக பிணத்திற்கு...

உள்ள தனியார் மருத்துவமனை யில் அனுமதித்தனர்.

நாகராஜை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் கவலைக்கிட மாக இருப்பதாகவும் 2 நாள் கழித்தே எதுவும் சொல்ல முடியும் என்றும் கூறியுள்ளனர்.

மேலும் மருத்துவ செலவுக்காக ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் கட்டும்படி யும் கூறியுள்ளனர். அதன்படி உற வினர்களும் பணத்தை கட்டினர்.

அதேபோல் 2 நாள் கழித்து சிறப்பு சிகிச்சை அளிக்க வேண்டும். அத னால் மேலும் ரூ.1 லட்சம் கட்டும் படி கூறியுள்ளனர்.

அதற்கு நாகராஜ் உறவினர் எங்களிடம் பணம் இல்லை. ஊருக்கு சென்று யாரிடமாவது கடன் வாங்கி கட்டி விடுகிறோம். நீங்கள் சிகிச் சையை அளியுங்கள் என்று கூறி யுள்ளனர்.

ஆனால் அதனை ஏற்க மறுத்த மருத்துவமனை நிர்வாகம், பணம் இல்லாவிட்டால் நீங்கள் நோயா ளியை குண்டூர் அரசு ஆஸ்பத்தி ரிக்கு கொண்டு செல்லுங்கள் என்று கூறியுள்ளனர்.

இதையடுத்து வேறு வழியின்றி அவரை குண்டூர் அரசு மருத்து வமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் நாகராஜ் இறந்து ஒரு நாள் ஆகி விட்டது என்றனர்.

இதனால் ஆவேசம் அடைந்த நாகராஜ் உறவினர்கள் நாகராஜ் பிணத்தை எடுத்து கொண்டு அந்த தனியார் மருத்துவமனையின் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், மருத்துமனையின் கண்ணாடி ஜன்னல்களை உடைத்து நொறுக்கியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பொலிஸார் தலை யிட்டு சமரசம் செய்தும் போராட் டத்தை கைவிடவில்லை.

அவர்கள் பணத்துக்காக பிணத் துக்கு மருத்துவம் பார்த்த மருத்து வர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி வற்புறுத்தினார்கள்.

பொலிசார் மருத்துவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ததை தொடர்ந்து அவர்கள் போராட்டத்தை கைவிட்ட னர். (செ-6)

## வடக்கில் மக்கள் காணி...

தினம் சனிக் கிழமை இந்தச் சம்பவம் நடை பெற்றபோது அங்கு சமு கமளித்த அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப் பான இராணுவ முகாமின் உயரதிகாரி ஒருவர் இந்த விடயம் குறித்து அமைச் சர் ரிசாட் பதியுதீனுடன் தொலைபேசி யில் உரையாடியதன் பின்னர் இன்று திங்கட்கிழமை பேச்சுக்கள் நடத்தி தீர்வு காணப்படும் என்று போராட்டம் நடத்திய பொதுமக்களிடம் உறுதியளித்ததை யடுத்து அவர்கள் கலைந்து சென்றி ருந்தனர்.

ஆயினும் நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவோடு இரவாக அந்தக் காணியைச் சுற்றி முள்ளுக் கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்த தையடுத்து மறு நாளான நேற்று காலை மக்கள் ஒன்று திரண்டு இராணுவத்திற்கும் அரசுக்கும் எதிராகக் கண்டனங்களை வெளி யிட்டு இரண்டாவது நாளாகவும் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து, செட்டிகுளம் பிர தேச சபைத் தலைவர், பிரதேச செயலா ளர், இராணுவ பொலிஸ் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் சம்பவ இடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களு டன் பேச்சுக்கள் நடத்தி, 15 நாட் களுக்குள் இந் தப் பிரச்சினைக் குத் தீர்வு காணப்படும் என உறு தியளித் துள்ளதையடுத்து, இப் போதைக்கு இந்தப் பிரச்சினை ஓய்ந்திருக்கின்றது' என்று செட்டி குளம் பிரதேச சபை உறுப்பினர் சாஜ்டீன் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து, இரா ணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரியவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இராணு வத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துரைத்தார்.

அதேவேளை பொதுமக்களின் காணிகளையோ அல்லது பொதுத் தேவைக்குரிய காணிகளையோ இராணுவம் கையகப்படுத்த வில்லை எனவும் தெரிவித்துள்ளார். (செ-6)

## பூநகரி...

பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

தனது பணியின் நிமித்தம் இவர் தென்னிலங்கையிலிருந்து பூநகரிக்கு வந்திருந்தார் என்பது தெரியவருகிறது. இவரது சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (செ-6)


உடனடி
வேலைவாய்ப்பு



சர்வதேச ரீதியில் 35 வருட காலமாக இயங்கிவரும் எமது நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து O/L படித்தவர்கள் கோரப்படுகின்றனர்

துணை முகாமையாளர் | நிர்வாக உத்தியோகத்தர்

களஞ்சிப்படுத்துனர்

வயதெல்லை 18 – 28
தங்குமிட வசதிகள் உண்டு (C-9304)

தொடர்புகளுக்கு
0773551334, 0773550933. 0771363797

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி




கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS, இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். ஆரம்பம் இன்னும் சில தினங்களில்...பதிவுகளுக்கு உடன் அழையுங்கள்...

குறிப்பு: வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. தனிநபர்களிடம் சென்று ஏமாறாதீர்கள்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி → புகையிரதகடவை → AF or ஸ்ரான்லிறோட் → நக்கா றோட் → AF (8555)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு
021 753 3330, 0777 151 101 (C-9289)

விற்பனையாகிறது 2015
யுனிலங்காஸ் வாக்கிய பஞ்சாங்க கலண்டர்

★ இரகுநாத ஐயர் வாக்கிய பஞ்சாங்க கணிப்பு.
★ விஜய் T.V புகழ் முருகு பாலமுருகன் அவர்களின் 12 மாதத்துக்கும் இராசி பலன்கள், சந்திராஸ்ட குறிப்புகள்.
★ 15க்கும் அதிகமான தெய்வீக வண்ணப் படங்களுடன், தெளிவான அச்சமைப்புடன் Art Paper இல் அச்சிடப்பட்டு விற்பனையாகிறது.

விலை - 175/-

ஆலயங்கள், மன்றங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அச்சிட விரும்பின் தொடர்பு கொள்ளவும்.

(வடபழனி முருகு பாலமுருகன் அவர்களின் இன்றைய நாள் ஜோதிட நிகழ்ச்சி திங்கள் முதல் வெள்ளி வரை விஜய் T.V ல் காலை 7.05 முதல் 7.15 வரை பார்த்து பயன்பெறுங்கள்.)

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் - கொழும்பு 13. 077 6258778 (C-9272)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.